குருபாதம்

# ஞானசம்பந்தம்

திருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] குரோதன ஆண்டு சித்திரைத் திங்கள் 10-5-85 [இத

ஆதிப்பரமாசாரியமூர்த்தி

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமி

## குருபூஜை விழா 8—6—85

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

# “ ஞானசம்பந்தம் ”

## தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10–5–85 | இதழ் 6

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்பெருவிழா அழைப்பிதழ் | க |
| 2 | குருபூஜைவிழாக் காணவாரீர் ! | 301 |
| 3 | தருமைஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | 305 |
| 4 | திருமாணிகுழி தலச் சிறப்புக்கள் | 311 |
| 5 | உப்பின் உபயோகம் | 315 |
| 6 | அபிராமி அந்தாதி | 317 |
| 7 | திருவருட்பாத்திரட்டு | 321 |
| 8 | நால்வர் காலம் | 326 |
| 9 | நீலநக்கர் | 333 |
| 10 | திருத்தருமையாதீனச் சிறப்பு | 338 |
| 11 | மௌனமாய்ப் பேசும் மூர்த்தி | 342 |
| 12 | அரசாங்கம் பற்றி அறிஞர் பெருமக்கள் | 343 |
| 13 | செய்திகள் | 345 |
| 14 | கதிரவன் குடும்பம் | 349 |
| 15 | எதிர் காலம் | 352 |
| 16 | இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 4 | 357 |


உ
குருபாதம்

### ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

காரே சுமந்த கிரிமீது
  நின்று கடுங்கனலில்
நேரே அருந்தவஞ் செய்வீர்
  கமலையன் நெஞ்சிலன்பர்
ஆரேனு மாள்பவன் ஞானப்ர
  காசன் அடியரேனும்
பேரே படைமின் அதுபோதும்
  போதும் பிறப்பறவே.

— ஞானப்பிரகாசமாலை 8


ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் 25
ஆண்டுச் சந்தா வெளிநாடு 35
ஆயுள் சந்தா உள்நாடு ரூ 125
ஆயுள் சந்தா வெளிநாடு 350

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

**ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்**

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள்மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினுலே காணுத அருவினுக்கும், உருவினுக்கும், காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள், இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச்சொக்கநாதப்பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் குருஅருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படிச் சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்துவருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து, ஜீவசமாதிகூடிய திருக்கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு, குரோதன ஆண்டு வைகாசித்திங்கள் 17 ஆம்நாள் 30—5—85 வியாழக்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும். இந்நாட்களில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் நடைபெறும். சிவநேசச்செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம்பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம்
**காரியார் சொக்கநாதத் தம்பிரான்**

தருமையாதீனம் மடாலயம்
குரோதன - வைகாசி
1985

தருமையாதீனத்தை நிறுவியருளிய

# ஸ்ரீ ஆதிபரமாசாரியமூர்த்திகள் சரிதம்

---

பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்தவேளாளர் மரபில் ஸ்ரீ சுப்பிரமணியப்பிள்ளை மீனுட்சியம்மை என்னும் பெற்றேர்களுக்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுபதினத்தில் தோன்றினர். பிள்ளைத்திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவிலாது நிரம்பினர். பெற்றேர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரைசென்ற பொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் ''உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும், ஆலவாய் அரனுமே'' என்று சொல்லிப் பெற்றேருடன் ஊர்திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்நோறும் பொற்ருமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந் தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டுவந்தார். பொற்ருமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூயவெண்ணீறு துதைந்தபொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களதுசெயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜைஉணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, ''முற்பிறப்பில் உன்னல் பூஜிக்கப் பெற்றுவந்த நாம் பூஜைப்பெட்டகத்துடன் பொற்ருமரைத் தீர்த் தத்துள் ஈசானத்திசையில் இருக்கிரேம்; மூழ்கிப் பெறுக'' என்று அருளிச் செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்ருமரைத் தீர்த்தத்தில்மூழ்கி ஆன்மார்த்தமூர்த்தியைப்பெற்று ஆனந்த பரவசம் உற்ருர். பின்னர், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று ''பெருமானே! பூஜிக்கும்நெறியை அருள்புரியவேண்டும்'' என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, ''திருவாரூர் ஞானப்பிரகாசரிடம் ஞானேபதேசமும், சிவபூஜையும் பெறுக'' என்றுபணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும்சென்று,

"உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து, சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக" என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுளின் திருமுன்பு சீடரின் வருகையை ஞானப்பிரகாசர் எதிர்நோக்கி இருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீட்சையும் சிவபூஜையும் பெற்ருர். பின்பு அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப்பாடியதே சொக்கநாதவெண்பா. அவர்செய்தகுருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள் ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினைமுடித்து மீள்கையில் கைவிளக்கு எடுப்போன், அங்கு இல்லாமையைக் கண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் இல்லம் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபோது "நிற்க" என்று சொல்லி உள்ளே சென்ருர். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பால் சூழ்ந்தே பெய்தது. மறுநாட்காலையில் குருபத்தினியார் கண்டார். கணவனரிடம் சென்று தெரிவித்தார். குருமூர்த்திகள் அச்செய்தியைக் கேட்டு வந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்குங் குருவாயினீர்; தனியிடத்தில் இருந்து உம்மை நாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மையுரைத்துச் சமய பரிபாலனம் புரிக' என்றருளினர். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக் கும்தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார் புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி? அப்படியாக உரைத்தருளே"

என்று விண்ணப்பித்தார். அதுகேட்டுக் குருமூர்த்திகள் 'தருமபுரம் செல்க' எனப் பணிந்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்று முதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமயபரிபாலனம் புரிந்தார்; ஞானநூல்கள் பலஅருளினர்; ஆனந்தபரவசர்முதலியபலர்வழிஞானப்பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞான பீடத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகள்.

# திருநாள் விபரம்

வைகாசி மீ

| தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | திரு நாள் | விபரம் |
|---|---|---|---|---|
| 15 | 28—5—85 | செவ்வாய் | | காலை கணபதிஹோமம். நவக்கிரகஹோமம். |
| 16 | 29—5—85 | புதன் | | ஹஸ்தநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு மணி 8க்குமேல் 9-30க்குள் தனுர் லக்னத்தில் அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தி மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம். |
| 17 | 30—5—85 | வியாழன் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 8-க்குமேல் 9-க்குள் மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகத்துவஜாரோகணம். |
| 18 | 31—5—85 | வெள்ளி | 2 | கற்பக விருக்ஷக்காட்சி. |
| 19 | 1—6—85 | சனி | 3 | பூதம், பூதகி, இடும்பவாகனக்காட்சி. |
| 20 | 2—6—85 | ஞாயிறு | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக்காட்சி. |
| 21 | 3—6—85 | திங்கள் | 5 | சகோபுர ரிஷபவாகனக் காட்சி. |

குரோதன ஸ்ரீ

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | 4—6—85 | செவ்வாய் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடாவாகனக்காட்சி. |
| 23 | 5—6—85 | புதன் | 7 | இரவு மணி 7-30க்குமேல் 9-30க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம். புஷ்ப விமானம் வெள்ளிரதக்காட்சி. |
| 24 | 6—6—85 | வியாழன் | 8 | குதிரை, கிளி, யானைவாகனக்காட்சி. |
| 25 | 7—6—85 | வெள்ளி | 9 | காலை மணி 6-30க்குமேல் 7-30க்குள் மிதுன லக்னத்தில் மஹாரதாரோகணம். 9-30க்கு கடகலக்னத்தில் திருத்தேர் வடம்பிடித்தல். |
| 26 | 8—6—85 | சனி | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம். |
| 27 | 9—6—85 | ஞாயிறு | | மௌன உற்சவம். |
| 28 | 10—6—85 | திங்கள் | | ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம். |
| 29 | 11—6—85 | செவ்வாய் | | காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம். காலை மணி 10-45க்குமேல் 11-45க்குள் சிம்ம லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம். |

உ

குருபாதம்

30—5—85 முதல் 7—6—85 முடிய ஒன்பது நாட்கள்

திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில்

மாலை 5-30 மணி முதல் 6-00 மணி வரை

**தேவாரப் பண்ணிசைப் பயிற்சிவகுப்பு நடைபெறும்.**

நிகழ்த்துவோர் :-

திருமுறைக் கலாநிதி

**திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள்**

தருமபுரம்.

கலைமாமணி

திருப்பனந்தாள் **திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்**

திருச்சிராப்பள்ளி.

★

மாலை 6 மணி முதல் 7 மணி வரை

**மாதவச்சிவஞானமுனிவர் இருநூறுவதாண்டு நினைவாகச்**

**சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறும்.**

" **சிவஞானபோதம்** "

நிகழ்த்துபவர் :-

பேராசிரியர்

**திரு. ஆதி. முருகவேள்** எம். ஏ.,

திருச்சிராப்பள்ளி.

---

**குறிப்பு :-** ஒன்பது நாட்களும் தவறாது வகுப்புக்களில் கலந்துகொள்வோர்க்குச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

உ

குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

(30—5—85 முதல் 9—6—85 முடிய)

## திருஞானசம்பந்தர் திருநாள்

30—5—85 வியாழக்கிழமை ] [ மாலை 7-00 மணி

## கருத்தரங்கம்

வரவேற்புரை :-

வித்துவான்

**ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

கட்டளை விசாரணை, வைத்தீஸ்வரன்கோயில்.

தொடக்கவுரை :-

பங்கேற்போர் :-

முதுமுனைவர்

**மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்**

மயிலாடுதுறை

— சங்ககாலத்தில் சைவம்

**வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார்**

சிதம்பரம்

— ஞானசம்பந்தர் காலத்தில் சைவம்

**தவத்திரு. ஊரன் அடிகள்**

வடலூர்

— தற்காலத்தில் சைவம்

## பண்ணிசையும் கர்னாடக இசையும்

செயல்முறை விளக்கம்

**டாக்டர் திரு. S. இராமநாதன்**

சென்னை

## திருநாவுக்கரசர் திருநாள்

31—5—85 வெள்ளிக்கிழமை ] [மாலை 7-00 மணி

### பட்டிமண்டபம்

வரவேற்புரை :-

வித்துவான்
ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
திருநள்ளாறு

தொடக்கவுரை :-

நடுவர் :-

பேராசிரியர் திரு. பா. நமசிவாயம், எம். ஏ.,
திருப்பத்தூர்.

பொருள் ;-

அப்பர் தேவாரத்தால் பெரிதும் நலம் பெற்றது
சமயமா ? சமுதாயமா ?

| சமயமே ! | சமுதாயமே ! |
| --- | --- |
| பேராசிரியர்<br>திரு. த. அகரமுதல்வன் எம் ஏ.,<br>பூம்புகார் | திரு. சு. கலியபெருமாள், எம். ஏ., பி. எட்.,<br>நெய்வேலி |
| திரு. தெ. இராசாமணி எம். ஏ.,<br>தருமபுரம் | வித்துவான்<br>திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.,<br>தருமபுரம் |
| வித்துவான்<br>திரு. ம சிவசம்பு, எம். ஏ.,<br>திருநெல்வேலி | திரு. மு. விவேகானந்தன் எம். ஏ.,<br>சன்னநல்லூர் |

### யோகாசனம்

திரு. ஆ. கிருஷ்ணன்
திருவாவடுதுறை

சுந்தரர் திருநாள்

1—6—85 சனிக்கிழமை ] [மாலை 7-00 மணி

## வழக்காடு மன்றம்

வரவேற்புரை :-

**வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்**
திருச்சிராப்பள்ளி.

தொடக்கவுரை :-

நடுவர் :-

**டாக்டர் இரா. செல்வக்கணபதி** எம்.ஏ., பிஎச்.டி., பி.எட்.,
தருமபுரம்.

வழக்கு :-

" அடிமைப்பண்பிற் சிறந்த சுந்தரரை ஆண்டவன் வருத்தியது கருணையன்று "

| வழக்குத்தொடுப்போர் : | வழக்கு மறுப்போர் : |
|---|---|
| புலவர். திரு. சி. சிவசங்கரன் எம். ஏ., | டாக்டர். மு. சிவச்சந்திரன் எம். ஏ., பி. எச்டி., பி. எட்., |
| ஆக்கூர். | தருமபுரம். |

நடுவர் தீர்ப்பு.

**நாட்டிய நிகழ்ச்சி**
**நீலா பாலகிருஷ்ணன், சேலம்.**

---

மாணிக்கவாசகர் திருநாள்

2—6—85 ஞாயிற்றுக்கிழமை [ [மாலை 7-00 மணி

## சிந்தனை மேடை

வரவேற்புரை :-

செந்தமிழ்ப்புரவலர்
**திரு. இரா. இராஜசேகரன்** பி. எஸ்சி., பி. எல்.
பூம்புகார்

தொடக்கவுரை :-

திரு. பி. டி. ஆர். கமலதியாகராஜன்,
மதுரை.

இணைப்பாளர் :-

மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்,
காஞ்சிபுரம்.

சிந்தனை :-

" திருவாசகச் சிந்தனையில் தெளிவு காண்டல் "

பங்கேற்போர் :-

1. டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
மயிலாடுதுறை.
2. பேராசிரியர் திரு. சொ. அரியநாயகம் எம். ஏ.,
கோயம்புத்தூர்
3. சித்தாந்தப் பேராசிரியர் திரு. ஆதிமுருகவேள்
திருச்சி
4. திரு. டி. என். இராமச்சந்திரன் பி. ஏ., பி. எல்.
தஞ்சாவூர்
5. வித்துவான் திரு. இராமசேஷன் எம். ஏ., பி. டி.
ஒரத்தநாடு
6. வித்துவான் டாக்டர் மகா. வெங்கட்ராமன்.
திருச்சி எம். ஏ,. பிஎச். டி.

## வேய்ங் குழலிசையரங்கு

திரு. பி. டி. ஆர். கமலதியாகராஜன் குழுவினர்.
மதுரை.

---

## மெய்கண்டார் திருநாள்

3—6—85 திங்கட்கிழமை] [மாலை 7-00 மணி

## கவியரங்கம்

வரவேற்புரை :-

தவத்திரு. வீரபாகு சுவாமிகள்
தருமபுரம்.

தொடக்கவுரை :-

விரிவுரை :-

**திரு. சி. சு. மணி**

பாளையங்கோட்டை

" சிவஞானபோதத்தில் சிவஞான முனிவர் "

இணைப்புக்கவிஞர் :

**பாவலர் திரு. ச. பாலசுந்தரம்**

கரந்தை.

பொருள் :-

" பெரியபுராணச் சான்றோர்களின் பண்புநலன்கள் "

1. **திரு. அ. கலியபெருமாள்** எம். ஏ., எம். ஃபில்.,
மன்னன்பந்தல்.
— அன்பு.

2. **திரு. சா. கிருஷ்ணமூர்த்தி** எம். ஏ.,
தருமபுரம்
— நாண்.

3. **திரு. சொ. அரியநாயகம்** எம். ஏ.,
கோயம்புத்தூர்
— ஒப்புரவு.

4. **கவிஞர் சோழன்** எம். ஏ.,
நெய்வேலி
— கண்ணோட்டம்

5. **கவிஞர் ஞானச்செல்வன்** எம். ஏ.,
திருவாரூர்
— வாய்மை.

**பரதநாட்டியம்**

**மாஸ்டர். பி. விஜயராகவன்**

மயிலாடுதுறை

## அருணந்திதேவர் திருநாள்

4—6—85 செவ்வாய்க்கிழமை] [மாலை 7-00 மணி

வரவேற்புரை :-

**திரு. C. R. குஞ்சிதபாதம்,** பி. ஏ., பி. எல்.,

வழக்கறிஞர், மயிலாடுதுறை.

தொடக்கஉரை :-

**திரு. எம். தங்கமணி,**

மயிலாடுதுறைத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர்.

விரிவுரை :-

**டாக்டர். இரா. கலைக்கோவன்**

திருச்சி

— சிற்பமும் ஓவியமும்

இணைப்பாளர் :

**டாக்டர். ஔவை. து. நடராஜன்.** எம். ஏ., பிஎச், டி.,

செயலர், தமிழ்நாடு அரசு தமிழ்ப்பண்பாட்டுத்துறை, சென்னை,

பொருள்:-

" இவர்கள் சந்தித்தால் "

**திருமதி. சாரதாநம்பியாரூரன்** எம். ஏ.,

தஞ்சாவூர்

— காரைக்கால் அம்மையார்.

**திருமதி. புனிதாஏகாம்பரம்,** எம். ஏ. எம். ஃபில்.

திண்டுக்கல்.

— மங்கையர்க்கரசியார்.

## மறைஞானசம்பந்தர் திருநாள்

5—6—85 புதன்கிழமை ] [ மாலை 7-00 மணி

### பட்டிமண்டபம்

வரவேற்புரை :-

**திரு. இரா. சிவபுண்ணியம், பி. ஏ., பி. எல்,**
வழக்கறிஞர், மயிலாடுதுறை

தொடக்க உரை :-

**திரு. என். விஜயபாலன்,**
பூம்புகார்த் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்.

சிறப்புரை :-

**மாண்புமிகு. வி. வி. சுவாமிநாதன்**
கைத்தறித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

நடுவர் :-

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 45 வது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

பொருள் :-

" சிவபரம்பொருளின்
கருணைத்திறம் வெளிப்பட்டுத் தோன்றுவது
தோத்திரத்திலா? சாத்திரத்திலா? "

| தோத்திரமே ! | சாத்திரமே ! |
|---|---|
| **திரு. இரெ. சண்முகவடிவேல்** எம். ஏ., திருவாரூர் | **திரு. ஆ. செகநாதன்** எம்.ஏ.,எம்.ஃபில். திருச்சி |
| **திரு. எம். சிதம்பரராசன்** சிதம்பரம் | **திரு. சீனி. சண்முகம்** எம். ஏ., நாகூர் |
| **திரு. நாக. துரையரசு** எஸ் புதூர். | புலவர் **திரு. வ. ஞானப்பிரகாசம்** கடலூர் |

இரவு :- ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்
" திருக்கல்யாணதத்துவம் "
**பிர்மஸ்ரீ பி. இராமதாச ஐயர்**
ஆனந்ததாண்டவபுரம்.

## உமாபதி தேவர் திருநாள்

6—6—85 வியாழக்கிழமை ] [ மாலை 7-00 மணி

## வரலாற்றுக் கருத்தரங்கம்

வரவேற்புரை :-

**திரு. வி. சா. குருசாமி தேசிகர்** எம். ஏ.,
தருமபுரம்.

தொடக்கவுரை :-

**மாண்புமிகு. திரு. ஆர். சௌந்தரராஜன்**
சத்துணவுத்திட்ட அமைச்சர், தமிழ்நாடு அரசு.

தொடர்புரை :-

**டாக்டர். ஏ. வி. ஜயசந்திரன்**
இயக்குநர், அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்
தருமபுரம்

பங்கேற்போர் :

1. **திரு. என். சேதுராமன்**
கும்பகோணம்
—கல்வெட்டியல்

2. **திரு. கே. ஆர். சீனிவாசன்,**
உதவித் தலைமை இயக்குநர்
அனைத்து இந்திய தொல்பொருள்துறை, (ஓய்வு)
திருச்சிராப்பள்ளி.
— கட்டிடக்கலை

3. **புலவர் திரு. வி. இராமமூர்த்தி,** எம். ஏ. பி. டி.,
திருச்சி
— செப்பேடுகள்

## மெல்லிசை

**திரு. பி. ஏ. இராமலிங்கம் குழுவினர்**
பூதாமூர், விருத்தாசலம்.

## சேக்கிழார் திருநாள்

7—6—85 வெள்ளிக்கிழமை ] [ மாலை 7-00 மணி

## திருக்குறள் - வினாவிடை அரங்கம்

வரவேற்புரை :-

**திரு. வி. ஆறுமுகம்பிள்ளை** ஐ. ஏ. எஸ்., (ஓய்வு)
மயிலாடுதுறை.

இணைப்பாளர் :-

முத்தமிழ்க்காவலர்
**திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்**
திருச்சி.

" வள்ளுவர் - சேக்கிழார் வழி வாழ இயலுமா ? "

வினாத்தொடுப்போர் :

1. **பேராசிரியர், டாக்டர். தெ. ஞானசுந்தரம்.** எம். ஏ., பிஎச். டி., சென்னை.
2. **திருமதி, எஸ். மீரா கிருஷ்ணமூர்த்தி.** எம். ஏ., எம். ஃபில். தருமபுரம்.
3. **புலவர். திரு. மு. வைத்தியநாதன்,** எம், ஏ., திருச்சி.
4. **திருமதி. துரை. வள்ளி.** எம். ஏ., மயிலாடுதுறை.
5. **திருமதி. ப. நீலா.** எம். ஏ., எம். ஃபில், தருமபுரம்.

## நாட்டியக்கலைநிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மெட்ரிக்குலேஷன் பள்ளி
மாணவ மாணவிகள்
மயிலாடுதுறை.

# ஞானப்பிரகாசர் திருநாள்

8—6—85 சனிக்கிழமை ] [ காலை 9-00 மணி

## குருபூஜைத் திருநாள்

வரவேற்புரை :-

**வித்துவான். திருமதி. ப. நீலா** எம். ஏ.,
தருமபுரம்

தொடக்கவுரை :-

**திரு. எம். வி. ஜெயராமன்** எம். ஏ.,
பெங்களூர்

சிறப்புரை :-

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

விரிவுரைகள் :-

பொருள் :-

" பட்டினத்தார் பாராட்டிய மூவர் "

1. **டாக்டர். கு. சுந்தரமூர்த்தி**
திருப்பனந்தாள்
— சிறுத்தொண்டர்

2. **திரு. வி. சா. குருசாமிதேசிகர்** எம். ஏ.,
தருமபுரம்
— திருநீலகண்டர்

3. **டாக்டர். சு. சாமிஐயா**
அண்ணாமலைநகர்
— கண்ணப்பர்

காலை 10-00 மணி

**ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சிறப்பு வழிபாடு**

குருபூஜை விழாமலர் :-

" சித்தாந்தச் சைவ வினாவிடை "

பகல் 12 மணி

**ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு**

நண்பகல் 1-00 மணி

**மாகேசுவரபூஜை**

மாலை 5-00 மணி

வரவேற்புரை :-

**வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.,**

தருமபுரம்

தொடக்கவுரை :-

**டாக்டர். சிவ. பார்வதி**

துணை இயக்குநர்; கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம்

சென்னை.

விரிவுரைகள் :-

1. **திரு. சொ. முத்தையன் எம். ஏ.,**
   தருமபுரம்
   — தாயுமானூர்

2. **திரு. சு. மு. சுந்தரராஜன் எம். ஏ.,**
   திருவாரூர்
   — பட்டினத்தார்

மாலை 6 மணி

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளல்

இரவு 9-00 மணி

## திருமுறை இசையரங்கு

தேவார இசைமணி, சீகாழி. **திரு. எஸ். திருஞானசம்பந்தம்**

தேவார இசைமணி, திருச்சி. **திரு. எஸ். முத்துக்கந்தசாமி**

## குருஞானசம்பந்தர் திருநாள்

9—6—85 ஞாயிற்றுக்கிழமை] [காலை 7-00 மணி

### பட்டினப்பிரவேசத் திருநாள்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்
சிவபூசகர்கள் சிவபூசை செய்தல்.

காலை 9-00 மணி

வரவேற்புரை :-

**திரு. டி. என். அருணாசலம்** பி. ஏ., பி. எல்.
தருமபுரம்.

தொடக்கவுரை :-

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் "கயிலைமாமுனிவர்"
**காசிவாசி ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

விரிவுரைகள் :-

தலைப்பு :-

"நால்நெறி"

1. **திரு. மு. சுந்தரேசம் பிள்ளை**
திருப்பனந்தாள்
— சன்மார்க்கம்

2. **திரு. சண்முகசுந்தர தேசிகர்**
திருவதிகை
— சகமார்க்கம்

3. **திரு. தா. குருசாமி தேசிகர்**
மதுரை
— சற்புத்திரமார்க்கம்

4. **திரு. வை. முருகையா தேசிகர்**
வைத்தீஸ்வரன்கோயில்
— தாசமார்க்கம்

காலை 10-00 மணி: சொக்கநாதர் வழிபாடு
பகல் 12-00 மணி: ஞானபுரீசுவரர் வழிபாடு
நண்பகல் 1-00 மணி: மாகேஸ்வரபூஜை

9—6—85 ஞாயிற்றுக்கிழமை ] [ மாலை 5-30 மணி

வரவேற்புரை :-

**டாக்டர். திரு. மு. சுவாமிநாதன்**

மயிலாடுதுறை

சிறப்புரை :-

' அறப்பணிச்செல்வர் '

**டாக்டர். திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை**

எம். பி. பி. எஸ்.

சிதம்பரம்

சான்றிதழ் வழங்கி விழா நிறைவுரை நிகழ்த்துதல் :

**மாண்புமிகு. ந. நல்லுசாமி** பி. ஏ., பி. எல்.

வீட்டுவசதித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு.

இரவு 7-00 மணி

**இன்னிசை**

தருமை ஆதீன இசைப்புலவர்,

தமிழக அரசுக் கலைஞர்,

**டாக்டர். சீகாழி திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினர்**

இரவு 10-00 மணி

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

**பட்டினப்பிரவேசம்**

கொலுக்காட்சியில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

ஸ்ரீகாசிமடம் ''கயிலைமா முனிவர்''
ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகளுக்குப்
பொன்னுடை போர்த்தி ஆசி அருளல்

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | குரோதன - சித்திரை - 10-5-85 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## குருபூஜைவிழாக் காணவாரீர்

**குருபரன் பெருமை :**

'தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது' என்பது பழமொழி.

'உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன்,'

என்பது நமது ஆதீன ஆதிபரமாசாரியரின் அருள்வாக்கு. ''காட்டு வித்தால் யாரொருவர் காணுதாரே, காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே'' என்பது அப்பர் அருள்மொழி. எனவே உயிர்கள் அறிவித்தால் அறிவனவே அன்றி தாமேஅறியும் தன்மையுடையன அல்ல. தாவரம் முதல் தேவர்கள் ஈருக அனைத்தும் உயிர்களே யாகும். அவற்றுள் மனிதப் பிறவி மிகச்சிறந்தது - மிகவும் உயர்ந்த தாகப் போற்றப்பெறுவது. உயிர்கள் படிப்படியாக உயர்ந்து நிலையான பேரின்பத்தை - இறைவன் திருவடியைப் பெறுதலே உயிர்களின் முடிந்த முடிவான இலட்சியம். அந்நிலையை எய்து வதற்குத்தான்- ஓர் ஆசாரியன்- ஒரு குரு தேவைப்படுகிறது. உலகி யலைப் பற்றியதானுலும் ஆன்மிக இயல்பற்றியதானுலும் ஓர் ஆசாரியன் தேவை.

" தந்தைதாய் ஆவானும் சார்கதி இங்கு ஆவானும்
அந்தமிலா ஆனந்தம் ஆவானும் — எந்தம் உயிர்
தானாகு வானும் சரணாகு வானும் அருட்
கோனாகு வானும் குரு. "

இப்பாட்டு குருபரன் பெருமையை குறித்தது ஆகும்.

## மூவகை ஆன்மாக்கள் :

சாத்திரத்தில் உயிர்கள் மூவகையாகப் பகுக்கப்பட்டு உள்ளன. மிக மேம்பட்ட உயிர்களுக்கு இறைவன் உயிர்க்கு உயிராய் உள் நின்று உணர்த்துகின்றான். அடுத்து இடை நிலைப்பட்ட உயிர்களுக்கு இறைவன், மான், மழு, காளகண்டம், முக்கண், தாழ்சடை முதலியவற்றுடன் உமாதேவி உடனாக இடபவாகனத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றான். கடைநிலையிலுள்ள உலகியல் வயப்பட்ட நம்போன்றவருக்கு இறைவன் உணர்த்துவது - அருள்வது என்பது மானிடவடிவிலேயே வந்து அருள் பாலிக்கின்றான். இதைத் தான் இறைவன் குருவாக வந்து அருள்பாலிப்பது என்று சொல்லுகிறோம். மூன்றுந்தரப்பட்டவர் கடைத்தேறவே இறைவன் குருவாக வந்து அருள்பாலிக்கிறான். இறைவன் தகுதி வாய்ந்த உயிர்களைத் தனக்கு இடமாகக் கொள்ளுகிறான். அந்த வடிவமே குருவடிவம். எனவேதான் குரு வேறு சிவன்வேறு அல்ல என்று சாத்திரம் பேசுகிறது. திருமூலர் " குருவே சிவம் எனக் கூறினன் நந்தி " என்று அருளினர்.

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை ஆன்மாக்களும் முறையே ஆணவம் ஆகிய ஒரு மலம் உடையோர்; ஆணவம், கன்மம் ஆகிய இருமலம் உடையோர்; ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மலம் உடையோர் ஆவர்.

## நமது குருபரம்பரை :

உயிர்களை ஈடேற்றம் செய்வதற்கு அவ்வகையில் முதற்குரவர் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகண்ட பரமசிவம் ஆவார். அவரிடம் உபதேசம் பெற்றவர் நந்தியெம்பெருமான். அவர்மூலமே முறையாக சனத்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரம்சோதி மாமுனிவர், மெய்கண்டார், அருள்நந்தி தேவர், மறைஞான சம்பந்தர், உமாபதி தேவர், காழி கங்கை மெய்கண்டார், காழி சிற்றம்பலநாடிகள், காழி பழுதைகட்டி ஞானசம்பந்தர், சிவபுரம் ஞானப்பிரகாசர், சிவபுரம் தத்துவப் பிரகாசர், திருவாரூர் பழுதை கட்டி ஞானப்பிரகாசர், கமலைஞானப்பிரகாசர், தருமபுரம் குருஞான சம்பந்தர் என்று திருக்கயிலாயத்தில் தொடங்கி நந்தி மரபு மெய்கண்ட சந்தானத்தில் வழிவழியாக வளர்ந்து தருமபுரத்தில் 450 ஆண்டுகளாக ஞானப்பண்ணைஅமைத்து நாளும் கலைஞானமும்

மெய்ஞ்ஞானமும் (உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ் ஞானம்) உலகினருக்கு உணர்த்தி உயிர்களுக்கு அவரவர் தரம் நோக்கி நலம் செய்து வருகிறது.

## ஆதிபரமாசாரியரின் அரும்பணிகள் :

கருணை திருவுருவாய்க் காசினியில் தோன்றிய பேரருளாளர் இன்றைக்கு 450 ஆண்டுகட்கு முன் பாண்டிநாட்டுத் திருவில்லி புத்தூரில் அவதரித்து, மதுரைச் சொக்கநாதப் பெருமானைப் பூஜா மூர்த்தியாக அடையப்பெற்று, கமலைஞானப்பிரகாசரை ஞான குருவாகப்பெற்று, திருக்கயிலாய பரம்பரைத்தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய அருட்செல்வர், ஞானசாகரம், தத்துவ மாமேதை, மெய்யுணர்வு பெற்று மேனிலை எய்திய சிவானு பூதிமான் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள். அவர் தமது குருநாதர் ஆணையின் வண்ணம், வில்வாரண்ய மாக விளங்குவதும், மயிலாடுதுறையின் தென் கிழக்கே இரண்டு கல் தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்திருப்பதுமான தருமபுரத்திற்கு எழுந்தருளி, ஆதீனத் திருமடத்தைத்தோற்றுவித்து வரும் பக்குவிகளுக்கு ஞானோபதேசம் செய்வித்தருளினர். இவர் பற்பல - அளவிலா அற்புதங்களை நிகழ்த்தினர். சிவபோகசாரம் சொக்கநாத வெண்பா முதலிய எட்டு அருள் நூல்களை அவனிக்கு வழங்கினர். அவற்றில் அரிய பெரிய தத்துவங்களை யெல்லாம் எளிமையாக விளக்கினர். தமக்குப் பின்னரும் ஞானமாமரபு தொடரத் திருவுளம் கொண்டருளிய கருணைப் பெருவள்ளலாகிய இவர் ஜீவசமாதியிலிருந்தும் மீண்டும் உலகமுகப்பட்டெழுந்தருளி குருமரபு தழைய சச்சிதானந்தருக்கு உபதேசித்தருளினர்.

## ஆதீனத்தின் அருந்தொண்டுகள் :

முடியுடை மூவேந்தர் ஆட்சியும், குறுநில மன்னர்களின் ஆட்சியும் தென்தமிழ் நாட்டில் முடிவுற்று வீழ்ச்சியடைந்த காலம் தொட்டு இன்று வரை தருமை ஆதீனம் செந்தமிழையும் சிவநெறி யையும் சீரும் சிறப்புமாக ஒல்லும் வகைஎல்லாம் நல்ல முறையில் வளர்த்து வருகிறது. தமது ஆட்சியிலுள்ள தனிச்சிறப்பு மிக்க திருக்கோயில்களை ஆதீனம் பிறர்போற்றத்தக்க முறையில் பேணித் திறம்படக் காத்து வருகிறது. இன்று அருளாட்சியில் வீற்றிருந்து அருளும் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மரபிற்கேற்ற முறையில் மடாலயத்தைச் சிறந்த முறையில் பரிபாலித்து வருவது பாரறிந்த உண்மையாகும். அத்தோடு நம் குருமகாசந்நிதானம் முன்னோர்கள்கண்ட கல்விஅறநிறுவனங்களைப் போற்றிப் புரப்பதுடன், பல சமுதாயப்பணிகளையும் மேற்கொண்டு அருளியுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். குருடர் - செவிடர்பள்ளி,

குருஞானசம்பந்தர் மெட்ரிகுலேஷன்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, பாலர்பள்ளி ஆகியவற்றை உண்டாக்கியும் சிறந்த முறையில் செயற்படுத்தி வருகிறார்கள். பல்லாண்டுகளாகப் பல்கலைக் கல்லூரி நடந்து வருகிறது. அத்தோடு அண்மையில் சிறு சுகாதார நிலையம் (Mini Health Centre) என்ற ஓர் அமைப்பு தொடங்கப் பெற்று உள்ளது. தருமபுரத்தின் சுற்றுப் பகுதியில் உள்ள ஏழைமக்கள் வைத்திய வசதியைஇதன் மூலம் பெற்று வருகிறார்கள்.

## சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் :

சென்ற ஆண்டு துவக்கப்பட்ட அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் ஈண்டு அவசியம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த நிறுவனத்தின் மூலம் பல சீரிய பணிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. ஒப்பீட்டுஆய்வு, சைவசித்தாந்தமரபுச்சொல்அகராதி, (Dictionay of Saiva Siddhanta Terms), சைவசித்தாந்த நூல் அடங்கல் (Bibliography of Saiva Ssddhanta works), பசு, பதி பாச இயல்பு பற்றிய ஆய்வுக் கூட்டங்கள் ஆகியவை பெரிதும் குறிப்பிடப் பெறவேண்டியவை ஆகும். மாதவச்சிவஞான முனிவர் இரு நூறுவது ஆண்டு நினைவையொட்டிச் சைவசித்தாந்தக் கோடைக்கால வகுப்புகள் பல இடங்களில் நடைபெற்றுள்ளன- நடைபெறவும் உள்ளன. கோவை, மதுரை, திருச்சி, சென்னை, திருநெல்வேலி, ஆகிய ஊர்களில் இந்நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பலரும் பயன்பெற்று வருகின்றனர்.

## குருவருள் பெறுக :

ஆதி பரமாசாரிய குருமூர்த்தி ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் குருபூஜை நம் ஆதீனத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற வுள்ளது. குருபூஜை வைபவம் 30—5—85 முதல் 9—6—85 வரை கோலாகலமாகநடைபெறும். இதையொட்டித் திருநெறியதெய்வத் தமிழ் மன்றத்தில் சைவசித்தாந்த வகுப்பும், பண்ணிசைப் பயிற்சி வகுப்பும், மாநாடும் நிகழவுள்ளன. ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதிகொண்டருளியகுருமூர்த்தமேஸ்ரீ ஞானம்பிகைஉடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகப் போற்றி வழிபடப்பெற்று வருகிறது. இத்திருக்கோயில் பெருந்திருவிழா குருபூஜைத்திருவிழா வாகச் சிறப்புற நிகழவுள்ளது. அன்பர்கள் தருமையாதீனக் குரு முதல்வரின் குருபூஜைப் பெருந்திருவிழாவில் பங்கேற்று, கண்டும் கேட்டும் செப்பியும், சிந்தித்தும் உய்தி பெறுவார்களாக! குருவருள் விளைக! குவலயம் தழைக!

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. — திருமந்திரம்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மயிலாடுதுறை - கூறைநாடு

அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருக்குடமுழுக்கு விழாவிற்கு எழுந்தருளியபோது

வழங்கியருளிய

# ஆசியுரை

24 8—1984

"ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலம் தான்பெரி துமுடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே"

## அடிப்படைத் தேவை இரண்டே :

மனிதனுக்கு இன்றியமையாத் தேவைகள் இரண்டு. ஒன்று உணவு; மற்றொன்று உடை. உணவு உயிரைக் காப்பது; உடை மானத்தைக் காப்பது. இதனைக் கருத்தில் கொண்டே மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்னும் புலவர், புறநானூற்றில், அரசனுக்கும் ஆண்டிக்கும் அடிப்படைத் தேவைகள் இரண்டுதான் என்று கூறினார்.

"தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே ''

என்றுகூறினர். இங்குஉடுப்பவைஇரண்டுஎன்பதுமேலாடையையும் கீழாடையையும் குறிக்கும். இக்கருத்திலேயே இம்மைக்குத்தேவை உணவும் உடையும் ஆகிய இரண்டே என்னும் பொருளில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் '' இம்மையே தரும் சோறும் கூறையும் என்றருளினர்.

## உழவின் உயர்வு :

உணவு உற்பத்தி ' வேளாண்மை ' என்றும் உடை உற்பத்தி நெசவுத் தொழில் என்றும் வழங்கப் படுகின்றன. இவ்விரண்டனுள் வேளாண்மை முதன்மையானது; புனிதமானது. தனக்கு வரும் பொருள்இலாபத்தைக் கருதாது உயிர்களின் பசிப்பிணி நீக்கும் நன்மை ஒன்றையே கருதிச் செய்யும் செயல் உழவு ஆதலின் இது இங்ஙனம் போற்றப் படுகின்றது. உழவும் ஒரு தொழிலாயினும் மற்றதொழில்களோடு சேர்த்துக்கூறப்பெருமல் தனித்துப்போற்றப் படுவதற்கு இதுவே காரணம். இதனுல்தான் திருவள்ளுவர்,

'' சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனல்
உழந்தும் உழவே தலை ''

என்றும்,

'' உழுவார் உலகத்தார்க் காணி ''

என்றும் கூறுகிருர். வேளாண்மை என்னும் சொல்லுக்கு உழவு என்னும் பொருளோடு உபகாரம்செய்தல் என்னும் பொருளே முதன்மையாகக்கொள்ளப்படுகிறது.

'' தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு ''

என்னும் குறளில் அச்சொல் அப்பொருளில் வழங்கப்படுவது காணலாம். எனவே உழவைமேற்கொள்வோர் பிறர்க்குதவும் மனப்பான்மையை இயல்பிலே கொண்டிருத்தல் அவசியம்

## தானப் பொருள்கள் :

உயிர் உடலில் தங்கியிருப்பதற்கு இன்றியமையாது வேண்டப் படுவது உணவு. உயிரோடுகூடியமனிதன் பெருமையோடுஅதாவது

மானத்தோடு வாழ்வதற்கு உடை இன்றியமையாதது. ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டிய அடிப்படைத் தேவைகள் இவ்விரண்டு தான் என்பதை முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். ஔவையாரும் தம் நல்வழியில், " உண்பது நாழி! உடுப்பது நான்கு முழம், " என்றுகூறியுள்ளார். ஆடையில்லாத மனிதன் பெருமை குறைந்த மனிதன் என்னும் கருத்தில் " ஆடையில்லாத மனிதன் அரைமனிதன் " என்னும் பழமொழியும் தோன்றியுள்ளது. இந்த இரண்டின் தேவையை நன்கு உணர்ந்த முன்னோர்கள் தானம் கொடுக்கிற பொழுது உணவுப் பொருள்களையும், உடையையும் கொடுத்தலையே முக்கியமாகக் கருதினர்.

## உழைத்துப் பிழைப்பீர் :

மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும்உழவையும் அதிலிருந்து கிடைக்கும் பொருள்களை வைத்து மேற்கொண்டு செய்யும் பிற தொழில்களையும் தெய்வமாக எண்ணிப் போற்றவேண்டும் என்றும் எந்தவேலையுமே செய்யாது பிறர்உழைப்பில் வாழ்வோரைத் தூற்ற வேண்டும் என்றும் பாரதியார் கூறுகின்றார்.

" உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம் "

என்று பாடுகின்றார். இறைவன் யாரையும் வேலை செய்யாமல் - பிறர்க்குப் பயன்படாமல் உண்டு வாழப் படைக்கவில்லை. இது பலருக்கு விளங்குவதில்லை. சிறு குழந்தைகளும் வயதான முதியவர்களும் சும்மா இருந்து உண்பதாகக் கருதுகின்றோம். அது தவறு. குழந்தை சின்னஞ்சிறு வயதில் இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் மழலைமிழற்றியும் பெற்றோர்களை மகிழ்வித்து வாழ்கிறது. இன்னும் வளர்ந்த நிலையில் அக்கம் பக்கத்து வீடுகளில் சென்று பொருள்கள் வாங்கிவரப் பயன்படுகிறது. ஆகவே குழந்தை கூட நம்மிடம் சும்மா இருந்து உண்பது இல்லை என்பதை உணர்தல் அவசியம். வயதானநிலையில் உள்ளோர் பொறுப்பாக வீட்டில் இருப்பதனாலும் தகுந்தநேரங்களில் தங்களின் அனுபவ ஆலோசனைகளை வழங்குவதாலும் அவர்களும் ஓராற்றான் பயன் தந்து வாழ்கிறார்கள். இந்நிலை அத்தகையோர் தம்மோடு சில ஆண்டுகள் இருந்து பிரிந்தநிலையில் நன்குபுலப்படும். யாரும் யாருக்கும் பயன்படாமல் வாழ இறைவன் படைக்கவில்லை. எனவே எவரும் ஏதேனும் ஒன்றைச் செய்தே வாழவேண்டும் என்பது இறைவன் இட்டகட்டளை. இதனைமறந்து பலர், வீணாக, உண்பதும் உறங்குவதுமே தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள். அதைத் தான் பாரதியார் கண்டிக்கிறார்.

## தொழிலை மதியார் துயரை அடைவார் :

இங்கு இன்னுமொரு கருத்தும் நினைவிற்கு வருகிறது. இன்று ஒருசிலரைத் தவிர பலரும் தாங்கள் மேற்கொண்டுள்ள தொழிலை இழிவானது என்றும், அதனை எந்த நிலையிலும் தம் சந்ததியினர் மேற்கொள்ளக் கூடாது என்றும் கூறிவருகின்றனர். இந்த இழிவு மனப்பான்மையே அவர்களைத் தாழ்த்தி விடுகிறது என்பதை அவர்கள் உணரவில்லை. தன் தொழிலைத் தவிர பிறதொழில்கள் அனைத்தும் உயர்ந்தது என்று கருதுகின்றனர். இதுஒரு பிரமையே தவிர உண்மை இல்லை. இம்மாதிரியான இழிசெயல்கள் செய்வோர் நம்மையும் நாட்டையும் வளரவிடாமல் தடுக்கும் தடைக்கற்கள். தோட்டித் தொழிலாயினும் அதனைத் தெய்வமாக மதித்துப் போற்றவேண்டும். அங்ஙனம் வாழ்ந்தால் அந்நிலையே அவர்களைத் திறமையுள்ளவர்களாக்கிச் செல்வவளத்திலும் பிறவற்றிலும் அவர்களை உயர்த்தும். இதில் ஐயமில்லை. அதனால்தான்பாரதியார்,

> " செய்யும் தொழிலே தெய்வம் - அதில்
> திறமைதான் நமது செல்வம் "

என்று கூறுகின்றார்.

## பணிவோடு இயைந்த பக்தி :

உழவிற்கு அடுத்த நிலையிலுள்ளநெசவுத்தொழிலை மேற்கொண்டுள்ளவர்கள் செங்குந்நர்கள் அவர்கள்பலர்கூடி, இங்கேஎழுந்தருளியுள்ள அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திருக்குடமுழுக்கு விழாவினைச் செய்துள்ளார்கள். செங்குந்தர்கள் என்று அழைக்கப்பெறும் இவர்கள் பரமேசுவரனிடத்துப் பக்தி கொண்டவர்கள் ஆயினும் குறிப்பாக முருகபக்தி இவர்களிடத்து மிகுந்து வளர்ந்துள்ளது. அதற்குரிய காரணம், சுப்பிரமணியரின் சகோதரராகவும் முதல் துணைவராகவும் விளங்கிய வீரபாகுவின் மரபில் இவர்கள் வந்தவர்கள் என்பதே ஆகும்.

ஆடைநெய்யும் தொழிலை மேற்கொண்டிருப்பதால் இவர்கள் மிகுதியாக வாழும்பகுதியிலுள்ள சிவபெருமானின் திருக்கோயிலில் திருவிழாவின் தொடக்கத்தில் ஏற்றப்படும் கொடிச்சீலையைக் கொடுத்துதவும் தர்மத்தைச் செய்கிறார்கள். சில இடங்களில் இந்த கொடியேற்றும் விழாவை இவர்களே முன்வந்து நடத்துகிறார்கள்.

தங்கள் தங்கள் தொழிலுக்குகந்த அறத்தினை யாரும் செய்யலாம் என்பதற்கு இவர்களின் இனிய செயல் எடுத்துக்காட்டாகத் திகழ் கிறது. இவர்கள் முருகப்பெருமானின் விழாவாகிய சூரசம்ஹாரத் தையும் உபயமாக பல இடங்களில் நிகழ்த்துகிருர்கள். இத்தகைய முருகபக்தியை இயல்பிலேயே கொண்டுள்ள இவர்கள் மரபின் முதல்வராகிய வீரபாகுவின் வரலாறு குறித்து இங்கே சிந்திப்பது பொருத்தமாகும்.

## வீரபாகு வரலாறு :

முசுகுந்தச் சக்கரவர்த்தி என்னும் மன்னன் வசிஷ்ட முனிவரின் மூலம் கந்த சஷ்டி விரதத்தின் மகிமையை உணர்ந்து கொண்டான். அவ்விரதத்தைப் பன்னெடுங்காலம் மேற்கொண்டு முருகப்பெருமானைத் தியானித்து வந்தான். முருகக்கடவுள் எழுந் தருளி " நீ யாது வேண்டுவது? " என்று கேட்க, முசுகுந்தன் " உலக முழுவதையும் யான் அரசாளும் வண்ணம் வீரபாகு முதலான வீரர்களைத்தந்தருளும் " என்று வேண்டினன். முருகனும் அருள்புரிந்து வீரபாகு முதலாகிய வீரர்களை நோக்கி. " நீங்கள் முசுகுந்தச் சக்கரவர்த்தி அரசு செய்தற்கு ஏற்ற துணைவர்களாக இருக்கக்கடவீர் " என்று பணித்தார். அவர்கள் " சூரன் குலத்தை வதைத்த யாங்கள் சூரியகுலத்து மானிடனுக்குப் பணி செய்யோம் " என்று மறுத்துக் கூறினர்கள். ஆறுமுகக்கடவுள் அவர்களை நோக்கி, " நீவிர் நம் கட்டளையை மறுத்தீர்களாதலின் மானிட வடிவு எடுத்து முசுகுந்தனின் சேனைகளாய்ப் பலகாலம் இருந்து பின்பு தவம்செய்து நம்மை அடைவீர்களாக ! " என்று கட்டளையிட்டருளினர். வீரபாகு முதலானோர் பிழையைப் பொறுத் தருளப் பணிந்துவேண்டினர். பின்னர் முசுகுந்தச் சக்கரவர்த் திக்குச் சுற்றத்தாராக மண்ணுலகம் வந்தடைந்தனர்.

## வீரபாகு முசுகுந்தன் சம்பந்தம் :

முசுகுந்தன் கருவூர் என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரிந்து வரும்காலத்து அரம்பையர்கள் பூலோக மன்னர்கள் மாட்டுப்புதல்வியர்களாய்ப் பிறந்து வளர்ந்தனர். முசுகுந்தன் புட்பகந்தி என்னும் கன்னியை வீரபாகுதேவருக்கு மணம்செய்துகொடுத்தான். அவர்களிடத்துப் பிறந்த புதல்வியாகிய சித்திரவல்லியை வீரபாகு முசுகுந்தனுக்கு மணம்செய்து கொடுத் தார். பின்னர் வீரபாகு அனகன், சனகன் என்னும் இருபுதல்வர்

களையும் பெற்ருர். முசுகுந்தனின் பட்டத்தரசியாகிய சித்திரவல்லிக்காக இயமனுடனும் மலைநாட்டினருடனும் வீரபாகு முதலானோர் போர்செய்து வெற்றிகண்டனர். இந்திரனுக்காக வலன் என்னும் அவுணனோடும் போர்செய்து வெற்றி பெற்றனர். பின்னர் பல்லாண்டுகள் முசுகுந்தனிடத்துத் தங்கியிருந்துவிட்டு வீரபாகு முதலானோர் தவம்செய்து முருகப்பெருமானிடத்துச் சென்று சேர்ந்தார்கள். இதனைக் கந்தபுராணத்துள் கந்த விரதப்படலம் கூறுகிறது.

## வீரபாகு வழிவந்தோர் :

இந்த வீரபாகு முசுகுந்தனிடத்தில் சம்பந்தம்செய்து வாழ்ந்த போது தோன்றியவர்களின் பாரம்பரியத்தில் வந்தவர்களே செங்குந்தர்கள்என்னும் வழக்கு உள்ளது. குந்தம் என்ருல் ஈட்டி, வேல் என்பதுபொருளாகும். செங்குந்தம் என்ருல் இரத்தத்தில்தோய்ந்த வேல் என்பது பொருள். சூரசம்ஹார காலத்தில் வேலை எடுத்துச் சென்றபணியை வீரபாகு மேற்கொண்டதுபோல இன்றும்இவர்கள் சூரசம்ஹார விழாக் காலத்தில் இப்பணியை மேற்கொள்கின்றனர். செங்குந்தம் ஏந்திச் செல்லும் இவர்கள் செங்குந்தர்கள் என்று வழங்கப்பெறுகின்றனர் என்று கருத இடமுண்டு. மேலும் முருகப்பெருமான் விழாவினை ஆர்வமுடன் இவர்கள் மேற்கொள்வதாலும் வேலேந்திச் செல்வதை மரபாகக்கொண்டு வாழ்வதாலும் இவர்கள் வீரபாகு மரபினர் எனும் கருத்துப்பொருந்துவதாகவே உள்ளது.

## வாழ்த்து :

இத்தகைய சிந்தனைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்த இத் திருக்குடமுழுக்கு விழாவினைச் சீரியமுறையில் நிகழ்த்திய மக்களும் குறிப்பாகச் செங்குந்தர் மரபினரும் இவ் விழாவில் பங்குபற்றியுள்ள பக்தர்களும் பிறரும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழ எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

# திருமாணிகுழி தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

**வித்துவான். திரு. வி. சா. குருஸாமி தேசிகர்** எம். ஏ.,

( மலர் 44, இதழ் 5, பக்கம் 268 இன் தொடர்ச்சி. )

உள்பிராகாரத்தை வலம் வரும்போது தெற்குப் பிராகாரத்தில் அறுபத்து மூவர் சப்த மாதர்களை வழிபடலாம். மேற்கே பஞ்சமூர்த்திகள், யுகலிங்கங்கள் விஷ்ணுலிங்கம், சமயகுரவர் கஜலக்ஷ்மி ஆகியோரைத் தரிசிக்கலாம்.

சுவாமிகோயிலில் கோஷ்டங்களில் தெற்கே விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர், வடக்கே பிர்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுரர் கோயில் உள்ளது.

கிழக்கே நவக்கிரகங்கள் வடுகநாதர் சூரிய சந்திரர்கள் உள்ளனர்.

திருக்கோயிலுக்கு எதிரே செம்மலை விளங்குகிறது. இம்மலை சோதிகிரி, ரத்னகிரி, ருத்ரகிரி, புஷ்பகிரி, சஞ்சீவிகிரி, ஆகிய ஐங்கிரிகளை உடையதாய் விளங்குகிறது.

**மூர்த்திகள் :**

விநாயகர் செல்வவிநாயகர் எனப்படுவார். முருகன் ஆறு முகங்களோடு வள்ளி தெய்வயானை சமேதரராய்க் காட்சி தருகிறார். சுவாமி பெயர் அருள்மிகு வாமனபுரீசுவரர். அம்பாள் பெயர் அருள்மிகு அம்புஜாட்சி. சுவாமி அம்பாள் பெயர்கள் உதவிநாயகர் உதவிநாயகி மாணிக்கவரதர் மாணிக்கவல்லி எனவழங்கப்பட்டன எனவும்வழங்கப்பெற்றுள்ளன. நடராஜர் விக்ரகத்தில் பஞ்சாக்ஷரம் எழுதப்பட்டுள்ளது. தலமரம் கொன்றை மிகப்பழமையான தெய்வீக மரம். தீர்த்தம் சுவேத தீர்த்தம், கெடிலநதி ஆகியன.

**மாவலிமன்னன் வரலாறு :**

திருமறைக்காட்டில் இறைவன் திருமுன்னர் நெய்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அர்த்தயாமபூஜைமுடித்து அணைவரும்

திருக்காப்பிட்டுவிட்டு வீடுசென்றனர். தீபம் சுடர்தட்டி நெய்யிருந்தும் அணையும் நிலையை எய்திற்று. அக்கோயிலிலிருந்து எலியொன்று விளக்கிலிருக்கும் நெய்யைக்குடிக்கும் வேட்கையில் விளக்கினை அடைந்து நெய்யைக் குடிக்கத் தொடங்கிற்று. தவறுதலாக எலியின் மூக்கு தீபத்தில் பட்டது. விரைவாக எலி தன் மூக்கைச் சிலிர்த்தது. அவ்வசைவில் திரியில் இருந்த சுடர் நீங்கியது விளக்கு நன்கு எரியத்தொடங்கிற்று. இறைவன் அணைய இருந்தவிளக்கைத் தூண்டிய எலியின் சிவபுண்ணியப் பணிக்கு மகிழ்ந்தார். அபுத்திபூர்வமாகச் செய்யப்பட்டசெயலாயிருந்தாலும் அவ்வெலிக்கு மாவலிமன்னனுரும் பேற்றை வழங்கியருளினர். அவ்வெலியின் நோக்கம் தவருக இருந்தமையால் அசுரர் குல மன்னனுகும் அருளை வழங்கினர்.

மாவலி பிரகலாதனுடைய பேரனைப் பிறந்து மூவுலகையும் அடிப்படுத்திக் கொண்ட திறத்தால் புகழ்பெற்று விளங்கினன். மாவலியின் பெயரும் புகழும் இந்திரனுக்குக் கவலையளித்தது. இந்திரன் திருமாலிடம் சென்று எவ்வாறேனும் மாவலியை அழிக்க வேண்டினன். திருமால் இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி குள்ளமறையவராக, வாமனராக, காசிபமுனிவருக்கு அதிதி தேவியிடம்தோன்றி மாவலியை அடைந்து மூன்றடிமண் கேட்டார். சுக்கிராசாரியார் தடுத்தும் மாவலி இரப்பார்க்கு இல்லை என்றல் கூடாதென்ற அறநெறிப்படி மூன்றடிமண் தந்தேன் என்று கூறினன். குறளுருவாய் வந்ததிருமால் நெடுமால் ஆனர், மண்ணையும் விண்ணையும் ஈரடியால் அளந்தார். மூன்ருவது அடிக்கு மண் எங்கே உள்ளது? என்ருர். மாவலி தன் தலையைக் காட்டினர். திருமால் மாவலியின் தலையில் தன் திருவடியை வைத்து அழித்து அவனுக்கு நற்கதி கொடுத்தார்.

திருமால் மாவலியைக் கொன்றதால் விளைந்த கொலைப்பழி அவரைப் பற்றியது.

அக்கொலைப்பழி தீரத் திருமால் வாமன உருவுடனேயே இத்தலத்திற்கு வந்து பீமருத்திரரைக் காவல்புரியுமாறு கேட்டுக் கொண்டு மன ஒருமைப்பாட்டுடன் சிவபிரானை வழிபட்டு அருள் பெற்ருர்.

மாவலி வரலாற்றை அப்பர் பின்வரும் தேவாரத் திருப் பாடலில் அருளிச் செய்துள்ளார்.

நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபம்தன்னைக்
கறைநிறத்து எலிதன்மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவானுலகமெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும் குறுக்கைவீ ரட்டனுரே.

மாணி - பிரமசாரி. திருமால் வாமன பிரமசாரியாக வந்து வழிபட்டதால் கோயில் திருமாணிகுடி அல்லது திருமாணிகுழி எனப்பெற்றது. இறைவர் வாமனபுரீசுவரர் எனவழங்கப்பெற்றார்.

**கல்வெட்டுக்கள் :**

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் முதலாம் குலோத் துங்க சோழன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன் மூன்றாங் குலோத்துங்க சோழன், மூன்றும் இராசராச சோழன், இவர்கள் காலங்களிலும், பாண்டிய மன்னரில், விக்கிரம பாண்டியன் காலத்திலும், விசயநகர வேந்தரில் பிரதாபதேவ மகாராயர் காலத்திலும் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் இறைவர், திருமாணிகுழிமகாதேவர், உதவித் திருமாணிகுழி ஆளுடையார், உதவித் திருமாணிகுழி மகாதேவர், உதவித் திருமாணிகுழி உடையநாயனர், ஊர்செறி உதவிநாயகர் என்னும் பெயர்களால் குறிக்கப்பெற்றுள்ளனர். தேவாரத்தைப் போலவே, கல்வெட்டிலும் உதவித்திருமாணி குழி என்று ஊரின் பெயர் குறிப்பிடப்பெற்றிருப்பது நோக்கத் தக்கது. இறைவரின் பெயர்களில் மேற்குறித்த ஊர்செறி உதவி நாயகர் என்பது விசயநகர தேந்தனுகிய ஸ்ரீ பிரதாபதேவ மகாராயரின் (சகாப்தம் 1357) கல்வெட்டில் காணப் பெற்றுள்ளது.

முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் இத்திருமாணிகுழி, விருதராசபயங்கர வளநாட்டு, மேற்காநாட்டு உதவித் திரு மாணிகுழி என்றும், இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில், சயங்கொண்ட சோழவளநாட்டு உதவித் திருமாணி குழி என்றும், மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தில் இராசராச வளநாட்டு மேற்காநாட்டு உதவித் திருமாணிகுழி என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. எனவே முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வூரைத்தன்னகத்துக்கொண்ட வளநாடு விருதராச பயங்கரவளநாடு என்னும் பெயரையும், இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சயங்கொண்ட சோழவள நாடு என்னும் பெயரையும், மூன்றாங்குலோத்துங்க சோழன் காலத்தில் இராசராச வளநாடு என்னும் பெயரையும் பெற்றி ருந்த செய்தி புலனாகிறது.

இக்கோயிலிலுள்ள "பூவாலை மிடைந்து" என்றுதொடங்கும் விக்கிரமசோழனுடைய மெய்க்கீர்த்தி மாத்திரம் அடங்கிய கல்வெட்டு (vol vII Number 773) சோழமன்னர்களுக்குத் தில்லைச்சிற்றம்பலத்து இறைவன் குலதெய்வம் என்று குறிப்

பிடுகின்றது. "தன் குலநாயகம் தாண்டவம்பயிலும் செம்பொன் அம்பலஞ் சூழ்ந்த திருமாளிகையும் கோபுரவாசலில் கூடக சாலமும்... பசும்பொன் மேய்ந்து" என்பது இதை உணர்த்தும் கல்வெட்டுப் பகுதியாகும். (திருமழபாடியில் உள்ள விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தியிலும் இச்செய்திகூறப்பெற்றுள்ளது.)

தில்லையம்பதி, சோழமன்னர்களுக்கு முடிசூட்டும் பதிகளுள் ஒன்றாகும். இப்பதியில் இரண்டாம் குலோத்துங்க சோழன் முடிசூட்டிக் கொண்டான் என்று இவ்வூரிலுள்ள (மாணிகுழியில் உள்ள) அம்மன்னனுடைய கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. சோழமன்னர்கள் தில்லையில் முடிசூட்டிக் கொள்வதற்கு ஆதாரமாய் உள்ள இக்கல்வெட்டு மூக்கியமானது. ஆகையால் அக் கல்வெட்டில் வேணடிய அளவு கீழே குறிப்பிடுகின்றேன். "ஸ்வஸ்தி ஸ்ரீ ராசகேசரி பன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் தில்லைநகர் சிறப்புடைத்தாகத் திருமுடி சூடிய ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு அ (எட்டு) ஆவது ஜயங்கொண்ட சோழவளநாட்டு உதவித் திருமாணிகுழி உடைய நாயனர் கோயில் தானத்தாற்கு மகனர் திருநட்சத்திரமான உத்திரட்டாதி நாள் தீர்த்தம் பிரசாதிக்க எழுந்தருளுகிற சித்திரைத் திருநாளைக் கும், விக்கிரம சோழன சந்திக்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிவந்தங்களுக்கு விட்ட ................" என்பதாகும்.

இக்கல்வெட்டுக்குறிப்பு தருமையாதீன வெளியீடு மூன்றாம் திருமுறையில் உள்ளது.

பொன்னியல் பொருப்பரையன் மங்கையொரு
  பங்கர்புன றங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
  வித்தகர் மகிழ்ந்துறை விடம்
கன்னியிள வாளைகுதி கொள்ளவிள
  வள்ளைபட ரள்ளல்வயல்வாய்
மன்னியிள மேதிகள் படிந்துமனை
  சேருதவி மாணிகுழியே. — சம்பந்தர்.

# உப்பின் உபயோகம்

[ டாக்டர் ஆர். தியாகராஜன், L. I. M. எழுதிய 'குணபாடம்' (தாது-சீவவகுப்பு இரண்டு மூன்றும் பகுதிகள் 1952 – ஆம் பதிப்பு) என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது. தொகுத்தளித்தவர்: "செந்தில் குமரன்" ]

உப்பை நீர் விட்டு அரைத்து, விடக் கடிவாயின் மீது பற்றுப்போட்டு அனல் காண்பிக்க விட வேகம் குறைந்து விடும்.

உப்பை நீரில் கரைத்து, அத்தெளிநீரைத் தேள்கடிக்குக் கண்ணில் சில துளிகளை விட விடம் நீங்கும்.

உப்பு ஒரு தேக்கரண்டியளவு எடுத்து 3½ ஆழாக்கு வெந்நீரில்கரைத்துக்கொப்புளிக்கத் தொண்டைக்கட்டு, தொண்டை விக்கம், பல் ஈறல் வீக்கம் முதலியவை நீங்கும்.

உப்பை ஒரு பலம் எடுத்துத் துணியில் முடிந்து, கொதிக்கும் எண்ணெயில் தோய்த்துத் தாங்கக் கூடிய சூட்டில் ஒற்றடமிட, வீக்கமும் அதனால் உண்டாகும் வேதனையும் தணியும்.

மேலை நாட்டு முறைப்படி, ஊழி நோயில் நாடி காணப் படாதவர்களுக்கு உப்பை அளவுப்படி தீநீரில் கரைத்துக் கார் இரத்தக் குழாய் வழியாக உட்செலுத்துவதுண்டு.

ஆணி, முள் முதலியன பாதத்தில் தைத்தால் எடுத்து விட்டு அவ்விடத்தில் உப்புப் பொடியை வைத்துச் சுட்டிகை செய்ய, அதனால் ஏற்படும் விடத் தன்மைகளை வாராமல் தடுக்கும்.

உப்பையும் புளியையும் சம அளவு நீரில் கரைத்துக் கொதிக்க வைத்து, குழம்புப் பதத்தில் எடுத்து, இளஞ்சூட்டில் அடிபட்ட வீக்கம், சுளுக்கு இவைகளுக்குப் பற்றுப்போட,

இரத்தக்கட்டு கரைந்து வேதனை நீங்கி விடும். இப்பழக்கம் சாதாரண மக்களிடம் நிலவுகிறது.

பல்தேய்க்கச் செய்யப்படும் பற்பொடிகளில் உப்பைச் சேர்ப்பதுண்டு.

காதிலேனும் குய்யத்திலேனும் ஈ, எறும்பு, அட்டை போன்றவைகள் புகுந்துகொண்டால் அவற்றைவெளிப்படுத்த உப்பு நீரைப் பாய்ச்சுவதுண்டு.

உப்புக்கரைத்த நீரை ஆசன வழியில் செலுத்த, கீழ்க் குடலிலுள்ள கிரிப்பூச்சிகளை வெளிப்படுத்தும்.

காடிக்காரம் தின்று விடமுற்றவர்களுக்கு உப்பை நீரில் கரைத்துக்குடிப்பிக்க, அஃது அதனால் உண்டாகும் நஞ்சை முறிக்கும்.

மீன், மாமிசம், காய்கறி, இவைகள் அழுகிக்கெடாமல் இருப்பதற்கு உப்பைச் சேர்த்துப்பாடம் செய்வார்கள்.

## உய்வாய் நெஞ்சே !

கவிஞர் திரு. காராளன், கோவை.

ஒருமை யுடன்நினைந்து தருமபுரம் அணைந்து
குருவின் அருள்நனைந்தால் உய்வாய் நெஞ்சே!—உன்
இருமை வினைகளையும் இனிமை மிகவிளையும்
அருமை மனம்கரையும் அறிவாய் நெஞ்சே ! (ஒருமை)

ஆணவம் கன்மம் மாயையோ(டு) அழியும்
ஐம்புல வேடரின் ஆட்சியும் தொலையும்
தேனமர் கொன்றைத் திருவருள் விதியும்
தேவியோ(டு) இறைவன் தெரிசனம் தெரியும்—நீ(ஒருமை)

கட்டுரை எண். 59

# அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., D. Lit.,
PH. D., D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

**தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக் கின்றிலேன்; ஒற்றைநீள் சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்ருய்; அறியார் எனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.**

## அ. ஒற்றை நீள்சிலையும் அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்ருய்

(1) ஒப்பற்ற நீண்ட வில்லாகவும், ஐந்து அம்புகளாகவும், முறையே கரும்பினையும் மலர்களையும் தாங்கி நிற்பவளே என அழைக்கிருர். இட்சு என்ற வடசொல் இக்கு என வந்தது. கரும்பு என்பது பொருள்.

(2) 'மனோருபேட்சு கோதண்டா' என்ற சகஸ்ரநாமப்படி அம்பிகை மனமென்னும் கரும்புவில்லைத் தாங்கி நிற்கிருள். அவ்வாறே 'பஞ்ச தன்மாத்ர ஸாயகா' என்றபடி ஐந்து தன் மாத்திரைகளின் வடிவான ஐங்கணைகளையும் கொண்டிருக்கிருள். ஐம்பொறிகளை நெறிப்படுத்தி, மனத்தினை ஒருநிலைப் படுத்தி உன்னை நினைக்கும் தன்மையினை அளிக்கவல்லவள் நீயே எனச் சுட்டிக்காட்ட, கரும்பு வில்லினையும் மலர்க் கணைகளையும் குறிப்பிட்டார்.

(3) அம்பிகையின் கரத்தில் தாங்கப்படுவதால் கரும்புவில் ஒப்பற்ற தன்மை எய்திவிடுகிறது. அச்சிறப்பால் 'ஒற்றை' என்று அழைக்கப்பட்டது. மனத்தின் வடிவாகி அதன் ஆழத்தையும் உணர்த்தும் வகையில் சிலையினை 'நீள்சிலை' என்ருர்.

(4) அம்பிகை திரிபுரசுந்தரிகோலத்தில் கரும்பு வில்லும் மலர்க்கணைகளும் தாங்குகிருள். ஆனல் அக்கோலம் அமர்ந்த நிலையிலேயே இருக்கும். அவற்றைத் தாங்கிய அம்பிகை

நிலைத்துநிற்பதால் 'நின்றாய்' என்றார். "உலகெங்குமாய் நின்றாள்" எனவும் "அனைத்தையும் நீங்கிநிற்பாள்" எனவும் முன்பு கூறினர்.

(5) திருக்கடவூரில் அபிராமியம்பிகை கரும்பு வில்லும் மலர்க்கணையும் தரித்த அலங்காரம் கொள்பவள். அவற்றைத் தாங்கி அபிராமியாக நின்றகோலத்தில் காட்சிதருவதாலும் 'நின்றாய்' என்றார்.

## ஆ. தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன்

(1) முன்பாட்டில் கூறியவாறு அவளது சரணம்புயமு மல்லால் வேறு அடைக்கலம் இல்லை என்பது தெரிந்திருந்தும் அவளது வழிபாடாகிய அல்லது, இடையறாச் சிந்தனையாகிய தவ நெறியில் மனதைப் பழக்க நினைத்தேனில்லை என மற்றவர் களின் தன்மையினைத் தம்மீது ஏற்றிக் கூறிக்கொள்கிறார் அபிராமிபட்டர். ஏனெனில் அவர் நின்றும் இருந்தும் கிடந்தும் அவளையே நினைத்திருந்தவர்.

(2) 'ஈது' என்றது முன்பாட்டில் குறிப்பிட்ட அத்தஞ்சத் தையே ஆகும். அதுவன்றிப் பிற அடைக்கலம் இல்லையென நன்கு தெரிந்திருந்தும் அவளது வழிபாடாகிய பர ஆகம பத்தி யினைப் பயில நினைக்காத பிற அடியவர்களுக்காக வருந்துகிறார்.

(3) தவநெறியென்பது அவளை வழிபடும் நெறியும், இடை யறாது சிந்திக்கும் தன்மையுமே ஆகும். மீண்டும் இங்குச் சுந்தரர் திருத்துறையூரில் தவநெறி வேண்டிப் பெற்ற வரலாற் றினை நினைவு கொள்ளுதல் தெளிவினைத் தரும். உலகாயத வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும் உள்மனத்தால் எப்போதும் எண்ணியிருத்தலும் சிறந்த தவநெறியே ஆகும்.

(4) சக்தி வழிபாடாகிய ஸ்ரீ வித்யா நெறியும் சிறந்த தவத் துக்கு ஒப்பானதாக எண்ணப்படுவதால் அதனையே தவநெறி யென்றார் எனினும் ஆம்.

ஸ்ரீ வித்யா நெறி முன் செய்த தவத்தின் பயனாகவே இப் பிறவியில் எய்தப்பெறுவதாலும் அதனைத் 'தவநெறி' எனலாம்.

(5) இடையறாச் சிந்தனையாகிய அத்தவ நெறியில் நெஞ்சம் எளிதில் பதிந்து விடாது. முன் செய்த புண்ணியம் உடையவர்களுக்கு எளிதில் பதிந்து விடும். ஆனால் ஏனையோர் என் செய்வது? அந்த நெறியில் சிறிது சிறிதாகப் பழக வேண்டும். அதனையே நெஞ்சம் பயில நினைத்தல் என்றார்.

(6) "பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்ற திருக்குறளில் 'பயிலுதல்' என்ற சொல் பழகுதல் என்ற பொருளில் வருகிறது. "பக்தர்கள் பயில வந்து" என்ற சுந்தரர் தேவாரத்தில் 'அடிக்கடி' என்றபொருளிலும் வருகிறது எனவே அத்தவ நெறியில் அடிக்கடி பழகி ஈடுபடுத்தவேண்டும் என்பது தெளிவாகிறது.

(7) "அப்யாஸத்தினால் ( பயிற்சியால் ) அத்தவ நெறியில் முயல்வாயாக" என பகவத்கீதையில் பார்த்தனுக்குக் கண்ணன் உபதேசிக்கிறான். "நீந்தக் கற்றுக் கொள்பவன் அடிக்கடி பலமுறை பயனில்லாது முயன்று இறுதியில் கற்றுக் கொள்கிறான். அவ்வாறே இறையனுபவத்தில் பழக்கிக்கொண்டவன் அவ்விறை இன்பமாகிய கடலில் நீந்தமுடியும்" என்கிறார் இராமகிருஷ்ண பரமஹம்சர். அபிராமி பட்டரும் தஞ்சம் வேறு இல்லை என்று அறிந்தபின் அவளை எண்ணும் தவநெறியில் நெஞ்சம் பழகி அதனை எய்த நம்பால் வலியுறுத்துகிறார்.

(8) சரணம்புயமே கதி, தஞ்சம்பிறிதில்லை என்ற அபிராமி பட்டரின் கருத்து, கீழ்க்கண்ட தாயுமானவர் பாடலிலும் காணப்படுகிறது.

> நாதகீதன், என் நாதன், முக்கட்பிரான்
> வேத வேதியன், வெள்விடையூர்தி, மெய்ப்
> போதமாய் நின்ற புண்ணியன் பூந்திருப்
> பாதமே கதி மற்றிலை பாழ் நெஞ்சமே.

தாயுமானவர் 'பூந்திருப்பாதமே கதி' என்றார். 'சரணம் புயமல்லது கண்டிலேன் – ஈதல்லது கண்டிலேன்' என்கிறார், தாயுமானவர் 'நின்ற புண்ணியன்' என்றார். அபிராமிபட்டர் 'இக்கு அலராக நின்றாய்' என்கிறார். 'மற்றிலை' என்றார் முன்னவர். 'பிறிதில்லை' என்றார் பின்னவர். "பாழ் நெஞ்சை" அழைத்துப் பகன்றார் முன்னவர். நெஞ்சம் பயில நினைக்கச் சொல்கிறார் பின்னவர்.

## இ. அறியார் எனினும் பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.

(1) உலகியலில், பஞ்சைவிட மென்மையான பாதங்களையுடைய தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் தவறு செய்த பொழுதும் அடிக்கமாட்டார்கள்.

(2) 'வேற்றுப் பொருள் வைப்பு அணி' என்ற உத்தியில் இங்கு அம்பிகையினைத் தண்டிக்காதிருக்க வேண்டுகிறார். உலகில் சராசரித் தாய்மார்களே தங்களது குழந்தைகளை அடிப்பதில்லை. உலகன்னையாகிய நீ, அனைத்தும் அறிந்த நீ, என்னைத் தண்டிப்பாயோ? என வினவாமல் வினவுகிறார்.

(3) பஞ்சினையும் கண்டு தாய்மார்களின் அடிகள் அஞ்சுகின்றன. அவ்வளவு மென்மைபெற்றது அவர்களின் அடிகளென வருணிப்பது நூன்மரபு. "பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவி" என்பார் கம்பரும்.

(4) 'அஞ்சு' என்பதனை மெல்லடியார் அடியார் என இரு வேறு பொருள்களில் ஆண்டிருக்கிறார். ஓசைநயமும் உயர்ந்த இலக்கிய நயமும் காண்கிறோம். "கைத்தலத்தாள் மலர்த்தாள்" என்றார் முன்பும்.

(5) "அடியார் பெற்ற பாலரையே" என்றது 'தம்மக்கள் என்று திருவள்ளுவர் குறிப்பிடும் நயத்தை ஒத்திருக்கிறது.

(6) பெண்ணினத்தைப் பராசக்தியின் வடிவாகக் காண்பதே தேவி வழிபாட்டின் ஓர் அங்கமாகும். அபிராமிப்பட்டர் இங்குப்"பஞ்சு அஞ்சு மெல்லடியார்" என்று அவர்களைச்சிறப்பிப்பதுடன் தவறிழைத்தாலும் பெற்ற பாலரைத்தண்டிக்காத கருணையுள்ளத்தையும் காட்டுகிறார்.

(7) 'அறியார்' என்ற சொல் 'அறியாதவர்கள்' என்ற பொருளினை மட்டும் கொடுப்பதன்று. கருணையொன்றினை அன்றிப் பிறிதொன்றினை அறியாதவர்கள் எனவும் மடம் அல்லது வெகுளித் தன்மையினையுடையவர்கள் எனவும் பொருள் கொடுத்து நிற்கிறது.

(8) "பொல்லாத சேய் என்னில் தாய் தள்ளல் நீதமோ? புகலிடம் பிறிதுமுண்டோ" என்ற தாயுமானவர் பாடல் அடிகளில் மீண்டும் அபிராமிபட்டரின் கருத்துக்களைக்காண்கிறோம்.

(9) தேவி வழிபாட்டில் 'சுவாஸினி' பூஜை என்னும் பெண்ணின வழிபாடும் உண்டு. அப்போது தாய்மார்களை அம்பிகையாகவே கருதி உபசரிப்பர். அவர்களது திருவடித் துகளை அம்பிகையின் பாததூளியாகவே கருதிப் போற்றும் வழிபாட்டினைத் தேதியூர் சாஸ்திரிகள் அவர்களது சௌந்தரிய லகரி உரையில் காணலாம். 'சுவாஸினி' பூஜை செய்த பலன் அடைதலே இப்பாடலின் பாராயணப் பலனும் ஆகும்.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

# திருவருட்பாத் திரட்டு

( பொழிப்புரையுடன் )

**வித்துவான் திருமதி. ப. நீலா** எம். ஏ., எம், ஃபில்.,

( மலர் 44, இதழ் 4, பக்கம் 277 இன் தொடர்ச்சி. )

## 8. ஸ்ரீ காசி கேதாரகௌரியம்மை திருவருட்பா

வண்டணிசெய் மலரழகு புரியவள கமுங்கொப்பு
வார்குழையு மிருதோடும் வெண்
மதிகோடி யுதயமென வருபிரபை தருமுகமும்
வட்டமிடு சுட்டியொளியும்
தண்டரள நவரத்ந வாரமுங் களபமிகு
தண் கொங்கை யுங்கவின்செய்
சங்குதொ டகமொடு பொலிந்திடு பசுங்கிள்ளை
தருமபய வரதகரமுங்
கண்டொடு நறுந்தே னுறுங்கனி செழும்பால்
கனிந்தமுத மனைய மொழியுங்
கமலைகலை மகளமரர் குலதிலக மகளிர்புகழ்
கல்யாண சோபனமுமாய்
அண்டகோ டிகளனு தினந்துதிசெய் காசிவா
ழாதார சத்தி யுமையே
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமை யென்றே. (1)

(பொ-ரை) வண்டுகள் மூசி அழகுசெய் மலர்களைச்சூடிய விருப்பந்தரும் கூந்தலும், மேற்காதிலணி கொப்பும், நீண்ட குழையும், இருதோடுகளும், வெண்ணிலா ஒருகோடி உதித்தாலெனவரு ஒளிதரு முகமும், வட்டமான சுட்டியாம் நற்றியணியின் ஒளியும், குளிர்ந்த மூத்து முதலிய ஒன்பது மணிகளிணைந்த மாலையும், சந்தனம் பூசிய தண்ணிய தனங்களும், அழகுசெய்திடும் சங்காலான வளையல்களோடு விளங்குகின்ற

பசியகிளியும் சேர்ந்த அபய வரத கரங்களும், கற்கண்டோடு நல்ல தேன் நிறைந்த கனி, செழும்பால் கலந்து கனிந்த அமுத மனைய மொழியும் உடையவளே! திருமகளுடன் கலைமகள் - தேவர் குலதிலகமகளிர் புகழ்கின்ற மங்கல வாழ்த்தோடு - அண்டத்திலுள்ள ஆன்மாக்கள் தினந்தோறும் செய்யும் துதிகளும் பொருந்தும்படி காசியில் வாழ்கின்ற ஆதாரசக்தியாம் உமையவளே! நினது திருவடியைத் துதிக்கும் அடியனும் என்னையும் கடைக்கண் அருள்காட்டி ஆண்டருள்க.

(கு-ரை) வண்டணிசெய் அளகம். உமாதேவி கூந்தலில் வண்டுகள் வாழுமென்றது சாதியடை. 'வண்டு வாழுங்குழல் மங்கையோர் கூறுகந்தார்' (2-258-3) என்பார் சம்பந்தரும். கொப்பு-மேற்காதிலணியும் ஒருவகை அணி. 'அணிதரளக் கொப்பும் வயிரக்குழையும்'-(அபி அந்-78) 'வள்ளிக் கொடியிலே துத்திப்பூப் பூப்பானேன் சிங்கி-காதில் வங்காளத் தாரிட்ட சிங்காரக் கொப்படா சிங்கா'- (குற்று-குறவஞ்சி)

சூடகம்-வளையல். 'ஆடகத்தியன்ற சூடகக்கரம்'-(பண்டா. மும்-17.) 'சூடக முன்கை மங்கை ஒருபாகமாக' (2-223-3). கலைமகள் திருமகள் சோபனங் கூறலை-திருவிளையாடற் புராணத்துள்-திருமணங்கூறுங்காலை 'சொற்கலையாளும் பூவின் கிழத்தியும் தொழுது நோக்கி'-(164-பா). 'சுந்தரவல்லி தன்னைச் சோபனமென்று வாழ்த்தி-(165-பாடல்) அழைத்தேகினர்- என்பார் பரஞ்சோதிமுனிவர்.

செந்தா மரைத்தவி சிருந்தோன் படைத்துத்
திருந்துதன் கைசலித்தான்
செங்கண்மா லின்றெனை யளித்திட் டளித்தே
திடுக்கென் றவன் சலித்தான்
அந்தகனு மென்னைத் துரத்திப் பிடித்தவ
னடிசலித் துடல்சலித்தான்
அடியேனே னின்றள வெடுத் துடல்சலித் திலனென்
ஆணவத் துணிவுமென்னே
சிந்துரத் தந்தியும் சந்தனப் பந்தியுஞ்
செய்யலைக் கைவீசியே
செகமகிழ வருகங்கை சூழ்காசி நகரினில்
திகழ்விசா லாக்ஷியுமையே
அந்தரமி லாதெனது முன்வந்து நின்கமல
அடியிணைகள் முடியில் வைத்தே
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமை யென்றே. (2)

(பொ-ரை) சிவந்த தாமரையசானத்திலிருக்கும் பிரமன் படைத்துக் கை சலித்தான். செங்கண்ணுடைத் திருமால் காத்துக்காத்துச்சலித்தான். யமனும் என்னைத்துரத்திப்பிடித்துக் கால் சலித்துடல் சலித்தான். ஆனால் அடியனேன் மட்டும் இன்றளவும் உடல் எடுத்துச் சலிப்படையவில்லை. என் ஆணவத் துணிவு இருந்த வாறென்னே! சிந்துரமணிந்த யானை களையும், சந்தனமரத்திரள்களையும் அலைக்கரங்களால் வீசி உலகம் மகிழவரும் கங்கை சூழ்ந்த காசிநகரில் வாழும் அன்னையே! தாமதிக்காமல் என்முன் வந்து நினது கமலமலர் என்ற அடிகளை முடிமிசை வைத்துக் கடைக்கண் அருளைத் தந்து ஆண்டிடுக.

(கு-ரை) எண்ணற்ற பிறவிகளெடுத்துத் தளர்ந்ததனை அருணகிரியார் "எழுகடல் மணலை அளவிடி னதிகம்-எனதிடர் பிறவி அவதாரம்"(திருப்பு-596) என்கிறார்.

அந்தரம்-இடைவெளி. நான்அழைக்க-நீ வர-இரண்டிற்கும் இடைவெளியின்றி-தாமதிக்காமல் வருக-எனப்பொருள் படும். யானைத் தந்தங்களையும் சந்தனத்தையும் ஆறுகள் வாரிவரும் "சந்தன வேருங் காரகிற் குறடும் தண்மயிற் பீலியும் கரியின் தந்தமும்தரளக்குவைகளும் பவளக்கொடிகளும்...வந்திழிபாலி" (7-69-5) என்பது சுந்தரர் வாக்கு. கந்த மாமலர்ச் சந்தொடு காரகிலுந்தழீஇ வந்த நீர் குடைவார் (2-138-7)என்று சம்பந்தர் தேவாரத்தில் குறிப்புண்டு.

முதல் வரியில் 'படைத்துத் திருந்து தன் கைசலித்தான்'-என்ற வரி (1972) பொருள் விளக்கமின்றி இருக்கிறது. ஆகவே மால்- அளித்திட்டளித்தே-என அடுக்கி வருவதற் கிசைவாகப் படைத்துப் படைத்து-என இருப்பது உகந்ததாகும்.

சீருற்ற கயிலாய சிகரமும் பயில்பெருஞ்
செம்பொன்மா மேருகிரியுந்
திகழ்மந்தர சயிலமுங் கந்தமா தனமும்நல்
விந்தமொடு நீலகிரியும்
ஏருற்று வாழவே யிமயத்தில் வந்துதித்
தினிதுவளர் புதல்வியன்றோ
என்மனக் கல்லையோர் சிகரமென் றெண்ணியே
இருந்ததென யிரக்ஷியம்மா

காருற்று வளர்சோலை யுறுகாசி தழையவே
கருணையொடு வாழுமுமையே
காரணி புராதனி நிராதனி சிதானந்த
கானத்தில் வாழுமயிலே
ஆருற்ற நாயென் றிகழ்ந்துவிட் டாலென்னை
ஆதரிப் பவர்களுண்டோ
அருட்கடை செய்தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமையென்றே. (3)

(பொ-ரை) சிறப்புடைய கயிலாயம் முதலிய சிகரங்கள் விளங்குகின்ற மகாமேரு மலையும், விளங்கும் மந்திரமலையும், கந்தமாதனக்குன்றும், விந்திய, நீலமலைகளும் பெருமைப்பட்டு வாழும்படி இமயத்தில் வந்து பிறந்து இனிதாய் வளரும் பெண்ணல்லவா! என்மனக்கல்லையும் ஒரு சிகரமென்று எண்ணிக் கொண்டு இருந்து என்னைக் காப்பாற்றுக. மேகந் தீண்டும்படி உயர்ந்துநிற்கும்சோலைகள் நிறைந்த காசிதழைத்து விளங்கும் வண்ணம் கருணைசெய் உமையே! எல்லாவற்றிற்கும் காரணமாக-எல்லாவற்றிற்கும் பழமையாக இருந்தும் பற்றுக் கோடின்றி இருப்பவளே! உண்மையானந்த மென்ற காட்டில் வாழும மயிலே! யாருமற்ற நாய் என்றென்னை நீயும் இகழ்ந்து கைவிட்டால் என்னை ஆதரிப்பவர்கள் வேறுண்டோ? கடைக்கண் அருள் தந்து-உன்னடி பரவும் அடிமையென்ற வகையில் ஆண்டருள்வாய்.

(கு-ரை) பாட்டின் முதல்வரி 'கயிலாய சிகரமும்பர்பயில்'-என்று இருப்பின் பொருள் சிறப்புண்டு. இல்லையாகுல் 'பெரும்' -'மா' என்ற இரண்டடை மொழிகள் மேருகிரியை வாளா-தழுவும், பயில் என்பதும் எழுவாயின்றி இருப்பதும் நோக்கத் தக்கது. நல்விந்தம்-அகத்தியர் அடக்கிய பின் நல்ல மலையா யிற்று-ஆணவத்தை விட்டுவிட்டு. இமயமலையில்-பர்வத ராஜனுக்கும் மேனைக்கும் மகளாக-பார்வதியாக இறைவி வளர்ந்ததனல் மற்ற மலைகளும் பெருமையுற்றனவாம். ஏர்-உயர்ச்சி-ஈண்டு பெருமைக்கு வந்தது. 'மற்றொருவர் தன்னைப் பார் ஒப்பிலாத-ஏரானை' (6-66-3). கடினமான 'கல்' லென்ற தன் மனத்திலும் அவள் வாழலாம்-என்பதனை நயமுடன் ஆசிரியர் கூறினர். மனக்கல் -'கல்லில் வலிய மனத்தேன்' (7-73-3) என்று சுந்தரர் கூறுவது நோக்குக. சித்+ ஆனந்த கானம்-என மயில் வாழுதற்கேற்ற(உண்மையென்ற)காடு-என உருவகமாக்குவது

அழகிது. ஆருற்றநாய்– ஆருமற்ற என்பது தொகுத்தல் விகாரமாயிற்று. நீயே ஆதரவு தராவிடில் வேறு யார் உதவுவார்– யாரும் உதவார் என்பதை அப்பர் பெருமானும்

'எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறு விறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்' – (6-62-2)

என்பார். 'மற்றுப் பற் றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்'– (7-48-1) ஈற்றடிப் பொருள் விளக்கமாகவந்த நீ' 'வேறு' என்ற சொற்கள்–சொல்லெச்சங்கள்.

(தொடரும்)

---

**கடிதம்:**

P. அருள் நமச்சிவாயன் தஞ்சாவூர்,
வழக்குரைஞன் 6—5—1985.

மார்கழித்திங்கள் முதல் ஞாயிறு சிந்தனையாக அப்பூதியடிகளைப் பற்றி, குருமகாசந்நிதானம் ஆற்றிய அருளுரை அருமை. அப்பரடிகள் திருநீறு சாத்த முத்த திருநாவுக்கரசை அழைக்கும் இடத்தில் " சலனப்பட வேண்டிய அப்பூதியடிகள் சலனப்படவில்லை. சலனப்பட வேண்டாதவர் சலனப்பட்டார்" என்று இரு பெரும் அருளாளர்களின் மன நிலையை விளக்கும் குருமணிகளின் திறம் சலனப்பட வேண்டியவர், வேண்டாதவர் என்ற வேற்றுமையின்றி எல்லோரையும் சலனப் படுத்துவதாக இருக்கிறது. என்னையுமறியாமல் அடியேனது கண்கள் கலங்கின. சிந்தனைக்கு விருந்தாகவும் தோத்திர, சாத்திர, சைவ சித்தாந்த விளக்கங்களை யளிக்கும் இந்தப் பகுதிக்கு இன்னும் இரண்டொரு பக்கங்களைக்கூட்டி குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுபதேசத்தை முழுமையாகவே கொடுக்கலாம் என்பது அடியேனின் எண்ணம்.

கல்வெட்டாராய்ச்சி அறிஞர் திரு. சேதுராமன் அவர்கள் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுவது ஞானசம்பந்தத்திற்கு அதிகம் பெருமை சேர்க்கிறது. நால்வர் காலத்தைக் கல்வெட்டு மூலம் நிர்ணயிப்பதற்கு எடுத்துக்கொண்ட புதிய முயற்சி பாராட்டற்குரியது.

# நால்வர் காலம்

குடந்தை திரு. N. சேதுராமன் B. Sc., D M. I. T,
Director, Raman & Raman Private Limited

(மலர் 44, இதழ் 3, பக்கம் 284 இன் தொடர்ச்சி)

கோச்சடையன் ரணதீரன் மங்கலாபுரத்தில் சாளுக்கியரைத் தோற்கடித்தது எப்போது என்ற வினவிற்குத் திட்டவட்டமாக இப்போது விடை அளிப்பதற்கு இல்லை. சாளுக்கிய நாட்டில் முதலாம் விக்கிரமாதித்தன் கி. பி. 654 முதல் 681 வரை அரசாண்டவன். இவன் 674 – இல் பல்லவரை வென்று சோழமண்டலத்தில் ஊடுருவி உறையூரில் முகாமிட்டான். தொடர்ந்து பாண்டி மண்டலத்திலும் படையெடுத்திருக்கலாம். அப்போது இளவலான பாண்டியன் ரணதீரன் சாளுக்கிய விக்கிரமாதித்யனை மங்கலாபுரத்தில் தோற்கடித்து இருக்கலாம் 10. விக்கிரமாதித்தனின் மகன் வினயாதித்தன் 681 முதல் 696 வரை அரசாண்டவன். இவன் சோழ, கேரள, பாண்டிய, பல்லவரின் கூட்டணியை முறியடித்ததாகச் சாளுக்கியரின் செப்பேடுகள் கூறுகின்றன 11. இவன் காலத்திலும் மங்கலாபுரப் போர் நடந்திருக்கலாம். எப்படி இருப்பினும் போர் நடந்த காலத்தை நிர்ணயிக்கும் வகையில் இடைவெளி இருபது ஆண்டுகளுக்கு மேல் இல்லை. தந்தையால் நிர்மாணிக்கப்பட்ட மங்கலாபுரத்தில் மகன் ரணதீரன் சாளுக்கியரைத் தோற்கடித்தான் என்னும் வரலாற்று வடிவமே நமக்குத் தேவையானது.

ரணதீரனின் தந்தை மாறவர்மன் அரிகேசரி ஆவான். அரிகேசரி, நெல்வேலிப் போரில் சேரனையும், புலியூர்ப்போரில் கேரளனையும் வென்றவன் என்றும், எண்ணற்ற துலாபாரமும், இரண்ய கர்ப்ப தானங்களும் செய்தவன் என்றும் செப்பேடுகள் கூறுகின்றன. இவனது காலம் 680 க்கு முன் விழுகின்றது. இந்தக் கட்டத்தில், பெரியபுராணம், ஏனாதிக்கல்வெட்டு, மதுரை வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவைகளை நோக்குவோம்.

---

10 E. I. X No. 22; E. I XXVII No. 20;
11 E. I. IX Page 201

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆவான் (630 – 668). மேலைச்சாளுக்கியர்களுக் கும், பல்லவர்களுக்கும் தீராத பகைமை இருந்தது. கி. பி. 642ல்- நரசிம்மவர்மன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைத் தோற் கடித்தான் 12. சாளுக்கியரின் தலைநகரான வாதாபியை அழித் தான். அவ்வூரே இன்று பதாமி என்று விளங்குகின்றது. அவ்வூரில் உள்ள மல்லிகார்சுனர் ஆலயத்துப் பக்கத்தில் உள்ள பாறையில் நரசிம்மவர்மனது கல்வெட்டை இன்றும் காணலாம். நரசிம்மவர்மனும் வாதாபி கொண்டவன் என்று அழைக்கப் படலானான்.

சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தில், சிறுத்தொண்டர் நாயனாரைப்பற்றிக் குறிப்பிடும் போது, வாதாபிப் போரைப் பற்றி விரிவாய்எடுத்துரைப்பர். சிறுத்தொண்டரின் இயற்பெயர் பரஞ்சோதி என்பது ஆகும். இவர் அவதரித்த ஊர் சோழ நாட்டுத் திருச்செங்காட்டங்குடி. பரஞ்சோதி மன்னனிடத்து யானைப்படைத்தலைவராய்த் திகழ்ந்தவர். மன்னவர்க்குத் தண்டு போய் வாதாபித் தொன்னகரம் துகளாகச் செய்து பன் மணியும், நிதிக்குவையும் பரித்தொகையும் இன்னும் பலவும் மிகக்கொணர்ந்து அரசன் முன்வைத்தனர். மன்னனும்மகிழ்ந்து பரஞ்சோதியைப் போற்றினான். பரஞ்சோதியார் வாதாபிப் போரில் கலந்துகொண்டது கி.பி. 642 என்பதுவெள்ளிடைமலை.

பரஞ்சோதியார் போர்த் தொழிலை வெறுத்தார். சிவ பெருமான்பால் பக்தி கொண்டு, மன்னனிடம் விடைபெற்று, தனது பதியாகிய திருச்செங்காட்டங்குடி வந்தமர்ந்து. திருத் தொண்டில் ஈடுபாடு கொண்டனர். சிறுத்தொண்டர் என அழைக்கப்பட்டார். திருவெண்காட்டுநங்கைஎன்னும் நல்லாளை மணந்தார். அவர்களுக்கு ஓர் மகன் பிறந்தான். தங்கள் மகனுக்குச் சீராளன் என்னும் பெயரை வைத்தனர் 13. தமது மகன் சீராளனைச் செழுங்கலைகள் பலப்பயிலப் பள்ளியினில்

---

12 Sastri – A History of South India–Page 151 edition 1971.

13 திருச்செங்காட்டங்குடி உத்திராபதீஸ்வரர் கோயிலில் உள்ள முதல் இராஜராஜனின் 19 ஆவது ஆட்சிக் கல்வெட்டுக் கள் இரண்டில் (கி. பி. 1004) இறைவனின் பெயர் சீராளன் என்று கூறப்பட்டு உள்ளது. "திருச்செங்காட்டங்குடி மகா தேவர்சீராளதேவர்க்குப்பணிசெய்த சிறுத்தொண்ட நம்பிக்குத் திருவிழா எடுப்பதற்கும், தேவதானம் திருச்செங்காட்டங்குடி

இருத்தினர். அவ்வமயம் திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு வந்து சிறுத்தொண்டரை வாழ்த்தி, திருச்செங்காட்டங்குடி இறைவன்பால் பதிகங்கள் இயற்றி அருளினர். இந்நிகழ்ச்சிகளை நோக்குங்கால், திருஞானசம்பந்தர் திருசெங்காட்டங்குடி வந்தது சுமார் கி. பி. 650 என்று கொள்ளலாம்.

பலதலங்கள் ஏகியபின்பு திருஞானசம்பந்தர் மதுரையம்பதி வந்தடைந்தார். அப்போது மதுரையில் நெடுமாறன் என்னும் பாண்டியன் ஆட்சிபுரிந்து வந்தான். இவன் மனைவியே சோழனின் மகளாகிய மங்கையர்க்கரசியார். மன்னனின் மந்திரி குலச்சிறையார் ஆவர். பாண்டி மன்னன் சைன மதப்பற்று உடையவனாக இருந்தனன். மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, திருஞானசம்பந்தர், பாண்டி மன்னனைச் சைவ சமயத்தை ஏற்கும்படி செய்து அருளினர். மன்னனும் சைவ சமயத்தைத் தழுவி, திருத்தொண்டுகள் பலபுரிந்தனன். இம்மன்னனை நெல்வேலிப்போர் வென்ற நெடுமாறன் என்றும், நின்ற சீர்நெடுமாற நாயனர் என்றும் சுந்தரமூர்த்தி நாயனரும், நமபியாண்டார் நம்பிகளும் சேக்கிழார் பெருமானும் குறிப்பிடுவர். நெல்வேலிப்போர் வென்ற பாண்டியன் நெடுமாறனைத் திருஞானசம்பந்தர் சந்தித்தது கி. பி. 652 – இல் எனக் கொள்வதில் தவறில்லை.

பாண்டியரின் செப்பேடுகளின் கூற்றுப்படி கோச்சடையன் ரணதீரனின் தந்தையான நெல்வேலிப்போர் வென்ற மாறவர்மன் அரிகேசரியே நின்ற சீர்நெடுமாற நாயனர் என்பதை எளிதில் அறியலாம். செப்பேடுகளும் மாறவர்மன் அரிகேசரி நெல்வேலியில் சேரனை வென்றான் என்றும், புலியூரில் கேரளனை வென்றான் என்றும் கூறுகின்றன. சமீபத்தில் ஏனுதி என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டும் இதனை உறுதி செய்யும். இக்கல்வெட்டு வட்டெழுத்தில் உள்ளது. எழுத்தின் அமைதி 7 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சுட்டுகின்றது. கல்வெட்டைப் பார்ப்போம்.

---

சீராளதேவர் சித்திரைத் திருவாதிரைத் திருநாளில் சிறுத்தொண்டர் மாளிகையில் எழுந்தருளவும்" நிவந்தங்கள் அளிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இறைவனின் பெயர் சீராளன் என்பது பெரியபுராணத்திலும் தேவாரங்களிலும் காணப்படவில்லை. கல்வெட்டில் இச்செய்தி கூறப்படுவது உய்த்துணரத்தக்கது– தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை நன்னிலம் கல்வெட்டுக்கள் முதல் தொகுதியில் எண்கள் 67, 68 காண்க.

இராமநாதபுரம் மாவட்டம் மானமதுரை வட்டம் – ஏனாதி என்ற ஊரில் சமீபத்தில் கிடைத்த கல்வெட்டு 14.

1. ..............................து அறிந்தோ
2. தர்விழுமையுந் நோம்மை ....................
3. றிவாடெய் — — நேராத நேர்ப்பேரூர் க (ண்)
4. டிர் நெய்வேலிப் போரரார் வென் நேந்தர் பொழிகுருதி
5. நீரா நிலமகளை ஆட்டிய கோன் மாந்தார் நேரிர்கு
6. லமகள் ஆட்டினிரை கூ (ற்) றுல வொரு கால் பொலங்
7. கருசில் நூல் கலப்ப ஒரு காற் துலாபாரம்
8. புக்கான் பொரு காற்சிலே வேந்தனற்றோர் வாடத்தென்
9. புலிஊர் (சென்றிக்) குலே வேழங்கைப்படுத்த கோமா
10. ணணிருலகளவு மாபாய விரிந்து வானுரிஞ் சற்றிதா
11. ரமாபோலகுளிருந்தன்மைத் தோன்றிதாள்நட வாபோ
12. ரீ யானை உலங்குணி (மே) யா நாட்டிய கூடற் கோமாறனே கூறு
13. ஸ்ரீ சேந்தன் மாறன்
14. அரிகேஸரி
15. முள்ளி நா
16. ட்டு அரிகேசரி
17. நல்லூர் தச்ச
18. ன் சடயன் பூ
19. தன் எழுத்து

கடல் கோமாறன் – நெல்வேலிப்போர் வென்றவன் – சேந்தன் மாறன் அரிகேசரி – ஆகிய இச்செய்திகளால் – இக் கல்வெட்டு நின்றசீர்நெடுமாற நாயனுராகிய பாண்டி மன்னனுடையது என்பதை எளிதில் அறியலாம். மன்னன் துலாபாரம் செய்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. இச்செய்தி செப்பேடுகளிலும், கீழே சொல்லப்படும் வைகைக்கரைக் கல்வெட்டிலும் சொல்லப்பட்டுள்ளது. சேந்தன் மாறன் என்ருல் சேந்தனின் மகன் மாறன் என்பது பொருள். முள்ளிநாட்டு அரிகேசரி நல்லூர் என்பது இக்காலத்தில் அம்பாசமுத்திரம் அருகில் கிரியம்மாபுரம் என்று வழங்குகிறது. இவ்வூர் அரிகேசநாதர் கோயில் கல்வெட்டுக்களில் இறைவனின் பெயர் முள்ளிநாட்டு அரிகேசரி நல்லூர் அரிகேசரி ஈஸ்வரமுடைய நாயனர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது 15. இக்கோயில் மாறவர்மன் அரிகேசரியின் பெயரால் கட்டப்பட்டது என்பதை நன்கு உணரலாம்.

14 நன்றி – திரு. நடன காசிநாதன், இயக்குனர், தமிழ்நாடு அரசு தொல் பொருள் துறை – நன்றி – திரு. முத்துக்கோனர் மதுரை வரலாற்றுப் பேரவை.

15 A. R. EP. 455 of 1916.

வைகைக்கரைக் கல்வெட்டும் இம்மன்னனுடையதே 16. கல்வெட்டு மன்னனை சேந்தன்மாறன் என்று குறிப்பிடுகிறது. சேந்தனின் மகனாகிய மாறன் என்பது இதன்பொருள். மன்னனின் ஆட்சி ஆண்டு 50-இல் மன்னனின் பெயரால் அரிகேசரியான் என்னும் மதகு (நீர்மடை) கட்டப்பட்டது கூறப்படுகிறது. எண்ணற்ற துலாபாரமும், கோதானமும், இரண்ய கர்ப்ப தானமும் மன்னன் செய்தனன் என்றும் கூறப்படுகிறது. அக்ரகாரங்கள் பலவும் ஏற்படுத்தப்பட்டன. மங்கலாபுரம் என்ற ஊரையும் மன்னன் நிர்மாணித்தான். (இதே மங்கலாபுரத்தில் தான் இவன் மகன் ரணதீரன் சாளுக்கியரை வென்றான் என்பதை முன்பு கண்டோம்).

வைகைக்கரைக் கல்வெட்டு கிரந்தமும், வட்டெழுத்தும் கலந்து உள்ளது. எழுத்தின் அமைதி 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. சொல்லப்பட்டுள்ள செய்திகளால் இக்கல்வெட்டும் நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டி மன்னனது என்பதில் சிறிதும் ஐயமில்லை. மன்னன் சைன மதத்தவனாகக் காட்சி அளிக்கவில்லை. சைவ சமயத்திற்கு மாறிய பிறகு இக்கல்வெட்டு வெட்டப்பட்டு இருக்கவேண்டும் என்பதை எளிதில் அறியலாம். ஆட்சி ஆண்டு 50 எனக் கொடுக்கப்பட்டுள்ளது. சைவ சமயத்தைத் தழுவிய பின்பு மன்னனும் நெடுங்காலம் வாழ்ந்திருந்தான் என்று சேக்கிழார் பெருமானும் கூறுவர். தொகுத்து நோக்கினால், இம்மன்னன் கி. பி. 630 – லிருந்து 680 வரை ஆட்சி புரிந்திருக்கலாம் எனக்கொள்ளலாம்.

அரிகேசரியின் கொள்ளுப்பாட்டன் கடுங்கோன் என்னும் பாண்டின் ஆவான். இவன் களப்பிரர்களை ஒழித்தவன். கடுங்கோன் முடிசூடிய காலத்தைச்சற்றேறக்குறைய கி. பி. 550 என்று கொள்ளலாம். இக்காலமே மதுரையில் களப்பிரர் ஒழிக்கப்பட்ட காலம்.

களப்பிரர் என்பார் கருநாடகத்திலிருந்து வந்த ஒரு சாரார். இவர்கள் மதுரையைப் பிடித்து ஆட்சி புரியலாயினர். மதுரைக்

---

16 E. I. XXXVIII No 4; இதில் சேந்தன் மற்று என்று தவறாகப் படித்து உள்ளனர். சேந்தன் மாறன் என்பதுதான் சரியான வாசகம் என்பதை சாசனஆய்வு பக்கம் 32இல் உள்ள புகைப்படத்தில் காணலாம். இப்போது இக்கல்வெட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருங் காட்சி அகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது.

களப்பிரர் சைனர். சோழமண்டலம், தொண்டை மண்டலம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த களப்பிரர் பௌத்தர். இதன் விரிவான ஆய்வை திரு. மு. அருணாசலம் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையில் காண்க 17.

திருஞானசம்பந்தர் பதினாறு ஆண்டுகளே வாழ்ந்தவராகக் கருதப்படுகிறது. இதுவரை ஆய்ந்த ஆய்வின் பயனாய் இவர் காலத்தை கி. பி. 640 முதல் 656 வரை என்று கொள்ளலாம். இவரது காலத்தில் திருநாவுக்கரசரும் வாழ்ந்தார். ஆளுடைய பிள்ளையான ஞானசம்பந்தர் வயது முதிர்ந்த நாவுக்கரசரை " அப்பரே " என்று மரியாதையாக அழைப்பர். நாவுக்கரசர் 80-வயது வாழ்ந்தவராகக் கருதப்படுகிறது. எனவே திருநாவுக்கரசரின் காலம் சுமார் 580 – 660 எனக்கொள்வதில் தவறில்லை. வேறுபல சரித்திர நிகழ்ச்சிகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. அவை அறிந்த செய்திகளாதலால் விரிவுக்கு அஞ்சி விடுக்கிறேன்.

**சுந்தரர் காலம் :**

சுந்தரரின் காலத்தை அறியப்புகுமுன் பல்லவ மன்னர்களின் காலத்தைப் பற்றியும் சிறிதுகுறிப்பிட வேண்டி உள்ளது. திருநாவுக்கரசர் காலத்துப் பல்லவமன்னன் முதலாம் மகேந்திர வர்மன் ஆவான். அவனுக்குப்பின் ஆண்ட பல்லவ மன்னர்கள் வருமாறு :

1. முதலாம் மகேந்திரவர்மன் 600 – 630
2. முதலாம் நரசிம்மவர்மன் 630 – 668
3. இரண்டாம் மகேந்திரவர்மன் 668 – 670
4. பரமேஸ்வரவர்மன் 670 – 700
5. இரண்டாம் நரசிம்மவர்மன் 700 – 728 ராஜசிம்மன்

மூன்றாம் மகேந்திரவர்மன் 720 – 728

இரண்டாம் பரமேஸ்வர வர்மன் 728 – 730

17 Journal of The Madras University – Section A Humanities - Volume L 1 No. 1 – January 1979.

பல்லவ மன்னர்களில் இரண்டாம் மகேந்திரவர்மன் (எண்-3), ராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மன் (எண்-5) ஆகிய மன்னர்களின் செப்பேடுகள் இரண்டில் வானிலைக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளின் துணைக் கொண்டு, பல்லவர்களின் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சாளுக்கிய மன்னர்களின் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் இவைகளின் துணைக்கொண்டும், மேலேகாட்டியுள்ள பட்டியலை ஆய்வாளர் கணக்கிட்டுத்தந்துள்ளனர். பல்லவர்சரித்திரத்திற்கு அஸ்திவாரமாக அமைந்துள்ள இவ்வாய்வினை எபிகிராபியா இண்டிகா தொகுதி 29-இல் கட்டுரை எண். 11-இலும், எபிகிராபியா இண்டிகாதொகுதி 32-இல் கட்டுரைஎண். 9-இலும் காணலாம். இவ்வாராய்ச்சிக் கட்டுரைகள் 1953-இலும் வெளி வந்துள்ளன. முப்பது ஆண்டுகளுக்கு முன் வெளிடப்பட்ட இவ்வாராய்ச்சிப் பகுதிகளில் உள்ள காலக் கணக்கீடுகளை அறிய, பலருக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் சுந்தரமூர்த்தி நாயனாரின் காலத்தை ஆராயப் புகுந்த பல அறிஞர்களுக்கு சில குழப்பங்கள் ஏற்பட்டன.

நிற்க, விஞ்ஞான ரீதியாக பல்லவர் காலம் கணிக்கப் பட்டுள்ள மேல் வரும் பட்டியலைக் கொண்டு சுந்தரர் காலத்தைக் காணலாம்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில், "கடல் சூழ்ந்த உலகம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கற்கு அடியேன்" என்கின்றார். காடவர் கோன் என்றால் பல்லவ மன்னன் என்று பொருள். "உலகம் காக்கின்ற பெருமான்" என்று நிகழ் காலத்தில் கூறுவதால் அப்பல்லவ மன்னனும் சுந்தரரும் சமகாலத்தவர் என்பதை எளிதில் அறியலாம். கழல் என்பது மன்னனுக்கு உரிய அடைமொழி. சிங்கன் என்பது மன்னனின் இயற்பெயர். பல்லவர்களுக்கு, சிங்கன் என்றபொதுப் பெயரைக் கூறி விட்டபடியால் மீண்டும் ஒருமுறை சிங்கன் என்ற பொதுப் பெயரைக் கூற நியாயமில்லை. எனவே இங்கு சிங்கன் என்று சுந்தரர் குறிப்பது அவர் காலத்தில் வாழ்ந்த பல்லவ மன்னனின் இயற்பெயர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருநாவுக்கரசருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் பிற்பட் டவர் சுந்தரர். இப்பிற்பட்ட காலத்தில் சிங்கன் என்று பெயர் தரித்த பல்லவ மன்னன் ஒருவனே ஆட்சி புரிந்தவன். அவன் ராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மன் ஆவான். அவனது காலம் கி. பி. 700 முதல் 728 - வரையிலாகும். சுந்தரர் இக் காலத்தில் வாழ்ந்தவர் ஆவர். பின்வரும் ஆய்வும் இக் கருத்துக்குத் துணைநிற்கும். (தொடரும்)

# நீல நக்கர்

**வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன்** எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 7—4—1985 ஆங்கில மாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப் பெற்ற கட்டுரை]

மாதத்தில் ஒருநாள் .....ஒருமணிநேரம்.. ..உயர்ந்தசிந்தனைகளைப் பெறும் வாய்ப்புத் தருமையில் கிடைக்கிறது! அந்தநாள், செவிக்கும் சிந்தைக்கும், ஏன்...... அருட்குருவின் எழில்மிகு தரிசனம் கிட்டுவதால் கண்ணுக்கும் விருந்தாகும் நாள்!

காலையில் வழிபாடு முடித்துப் பத்துமணிக்குள் திருமடத்தில் இருக்கிறேன். அன்பர்கள் சிலரும் அங்கே குழுமியிருந்தார்கள். குருமணிகள் திருக்கோயிலுக்கு எழுந்தருளியிருந்தார்கள்.

பிரதான வாயிலின் இடப்புறம் இரண்டாம் தூணில் தும்புருவின் சிற்பம். அதில் என் மனத்தைச் செலுத்தினேன். கச்சணிந்த மனிதஉடல்; குதிரைத்தலை; இடக்கையில் யாழ் போன்றகருவி. வலக்கையால் மீட்டுகிறார். கழுத்தில அக்கமணி மாலை. தருமைத் திருமடத்துத் தூண்கள் ஒவ்வொன்றும் சிற்பக் கலைக்களஞ்சியம். மணி 10. உள்ளே நுழைகிறேன்.

குருமணிகள் சித்ராசனத்தில் அமர்கிறார்கள்; அன்பர்கள் திருநீறு பெற்றணிந்தனர். பாராயணத்தை அடுத்து அருளுபதேசம் தொடங்குகிறது.

திருநீலநக்கர் புராணச் சிந்தனை! முதலில் மாதச் சிறப்பாகச் சைத்ரோத்சவம் பற்றி உணர்த்திய பின் சில தத்துவங்களை உபதேசித்தார்கள்......

" அழிவிலிருந்துதான் தோற்றம் ஏற்படுகின்றது " "அந்தம் ஆதி என்மனார் " என்பது சிவஞானபோதம். துன்பமே இன்பத்திற்குக்காரணம்; சுடச்சுடப் பொன் ஒளி தருவதுபோல! மேலும் விளக்கினார்கள். ஜப்பானை எடுத்துக் கொள்ளுங்களேன்!

அழிவிலிருந்துதான் ஆக்கம் என்பதற்கு அந்நாட்டு வரலாறு ஒருசான்று! மேலும் காலத்தை உணர்ந்து – விரைந்து – வெற்றியோடு செயற்பட்டு முன்னேறியமைக்கும் அந்நாட்டு வரலாறு சான்றாக அமைந்துள்ளது!

அடுத்து, இறைவனை அடைதற்குரிய அன்புநெறி அறிவு நெறிபற்றி விளக்கமருளினார்கள். அன்பு – பக்தி; அறிவு - ஆசாரத்தினைச் சார்ந்தது. இறைவன் அன்பையும் விரும்பு கிறான்; ஆசாரத்தையும் விரும்புகிறான். அன்பு தோத்திர நெறி; அறிவு சாத்திரநெறி – இரண்டும் வேண்டும். அறிவில் பக்தி வேண்டும்; பக்தியில் அறிவுவேண்டும். அறிவும் அன்பும் சிவமும் சக்தியும் போல இணைபிரியாதவை" – குருமணிகள் எடுத்துக்காட்டும் அருளினார்கள். கண்ணப்பர்– அன்புநெறி; சிவகோசரியார் – அறிவு நெறி; குங்குலியக்கலையர் வரலாற்றை நோக்கும் போது திருப்பனந்தாளில் தாடகை பூசித்தமை ஆசாரபூசை; குங்குலியக்கலையர் சாய்ந்த இலிங்கத்தை அன்பால் நிமிர்த்தமை பற்றி அறிகிறோம். இங்ஙனம் இறைவனை அடையும் இருவகை நெறிகளைப்பற்றி அருளிய குருமணிகள் அம்பிகை காஞ்சியில் இறைவனை ஆகம முறைப்படி பூசித்தமையைக் குறித்தருளினார்கள்.

நீலநக்கர் புராணத்தின் தொடக்கமாக நாயனார் திருப் பெயரைப் பற்றி ஆய்வு நோக்கோடு கூடிய இனிய விளக்கம் அருளியமை மனத்தெளிவை உண்டாக்கியது.

"நக்கன்" என்பது இறைவனைக்குறிக்கும் சொல் "நக்கன் நாமம் நமச்சிவாயவே" என்பது சம்பந்தர்தேவாரம். நீலநக்கன் என்னும் பெயரில் நீலம் என்பது அம்மையைக் குறிப்பது. "நீலமேனிவாலிழை பாகத்தொருவன்" எனக் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அம்மையின் திருமேனியை நீலமேனி என்கிறது. ஆக 'நீலநக்கர்' என்ற பெயர் அம்மையப்பர் என்னும் பொருள்பயந்து நிற்கிறது என அருளினார்கள்.

"நீலநக்கர் சாத்தமங்கையில் அவதரித்தார்! இது திருநாவுக்கரசரும் பாடிய தலம்" காவிரியின் தென்கரைத் தலங்களுள் 81 ஆவது தலமாக விளங்குவது. அரிசிலாற்றின் வடகரையில் அமைந்திருப்பது" என அவதாரத் தலம்பற்றி அருளிய குருமணிகள் திருக்கோயில் பெயர் 'அயவந்தி' என்பதைக் குறித்தார்கள். திருக்கோயில் பெயரும் திருத்தலப் பெயரும் வேறு வேறு ஆக விளங்கும் நிலையில் அமைந்துள்ளமையைச் சுட்டி அத்தகைய ஊர்கள் சிலவற்றை எடுத்துக்காட்டாக

அருளிச் செய்தார்கள். சாத்தமங்கை – தலப்பெயர். அயவந்தி–திருக்கோயில்பெயர். அயன்–பிரமன்; வந்தி–வழிபட்ட; பிரமன் பூசித்த கோயில் அது.

அடுத்து நீலநக்கர் வழிபாடுபற்றிக் குறிப்பிட்டார்கள்; நீலநக்கர் சைவ அந்தணர் குலத்தினர்; சிவாகமமுறைப்படி இறைவனைப் பூசித்தல் - சிவனடியார்கட்குத் திருவமுது செய்வித்தல் என்னும் இருநெறிகளையும் மேற்கொண்டவர்.

“ மண்ணினிற்பிறந் தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார் ”

என்ற சேக்கிழார் வாக்கை ( திருஞானசம்பந்தர் புராணம் ) மேற்கோளாக்கி நீலநக்கர் மேற்கொண்ட இருநெறிகளின் சிறப்பைப் புலப்படுத்தினார்கள்.

நீலநக்கர் தம் இல்லத்தில் திருவாதிரை வழிபாடு ஆற்றி அயவந்தி நாதருக்குப் பூசை ஆற்றத் திருக்கோயிலுக்குச் சென்றார். அவர் மனைவியார் வழிபாட்டுக்குரிய பொருள்களை எடுத்துக் கொண்டு உடன் சென்றார்; இறைவனுக்குப் பூசனை செய்து முறைப்படி பஞ்சாக்கரத்தைச் செபித்துக் கொண்டு இருந்தார். அப்போது சுதைச் சிலம்பி ஒன்று சிவலிங்கத் திருமேனியின்மேல் வீழ்ந்தது. அருகுநின்ற அம்மையார் கண்டார்; சிலந்தி போகுமாறு விரைந்து வாயினால் ஊதித்துமிந்தார். உமிழ் நீரும் பெருமான்மேல் பட்டது. நீலநக்கர் இச்செயல் கண்டார்! மனம் பொறுதவர் ஆனார். ‘தகாத இச்செயல் செய்யக் காரணம் யாது?’ என வினவினார். தன் மனைவியின் அன்புச் செயலை – சிலந்தியால் சிவலிங்கத் திருமேனியில் கொப்புளம் தோன்றுமே எனக்கருதி வாயினால் விரைந்து ஊதித்துப்பிய மையை – மனத்தில் எண்ணாமல் சிவபூசையில் அனுசிதம் நேர்ந்ததே எனக்கருதினார். “நீ தவறு செய்தனை ஆதலால் உன்னை இங்குத் துறந்தேன்” என்றார். மனைவியார் அஞ்சினார். இல்லம்திரும்பாமல் திருக்கோயிலிலேயே இருந்தார். நீலநக்கர் தம் மனைபுகுந்து பள்ளிகொண்டார்.

குருமணிகள் அம்மையார் செயல் பற்றி அற்புதமான விளக்கம் அருளினார்கள். “தானே கீழே விழுபவனைத் தடுத்துப் பிடித்தல் போலவும் அடிக்க வருவோரைத் தடுத்து நிறுத்துதல் போலவும் விரைந்து செயல்படுதல் நிகழ்ந்தது. இச்செயல் அச்சம் அன்பு காரணமாக அமைந்தது” என்ற விளக்கம்

இதமாக இருந்தது. "அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும் நெஞ்சம் வாழி நினை நின்றியூரனை" என அருளினர் அப்பர். ஜவகர்லால் நேரு "அச்சத்தின் மூலம் பக்தி உண்டாகிறது", என்றார். "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்பர் திருவள்ளுவர். இங்ஙனம் பலமேற்கோள்களை அருளிய குருமணிகள், ஓர் அரிய உளவியல் ஆய்வுக்கருத்தையும் உணர்த்தினர்கள். "அச்சத்தின் மூலம் தான் வழிபாடு வந்தது" என்பது அது.

மேலோர் அன்பு காரணமாக வழிபாடு செய்வர், மற்றையோர் அச்சம் காரணமாக வழிபாடு ஆற்றுவர். அச்சமும் அன்பும் தேவையே. இதனல் தான் உலக வழக்கில் "பயபக்தி" எனக்குறிக்கிறேம் என அருளிய போது அவர்களது நுட்பமான சிந்தனை நமக்கு இனிய வாழ்வுநெறி காட்டியது! கண்ணப்பர் காளத்தியப்பர் கண்ணில் குருதி கண்டார்; அஞ்சினர்; அன்பு தொடர்ந்தது - பயமும் பக்தியும் தொடர்புடையன - என விளக்கமும் அருளினர்கள். முதிர்ந்த நிலையில் அச்சமும் அன்பும்ஒன்றுகும் என்பதை 'நிச்சலும்ஈசன் அன்பர் எதிர்ப்படில்' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப்பாடல் கொண்டு விளக்குகிறார்கள்.

குருமணிகள் நீலநக்கர் வரலாற்றைத் தொடர்கிறார்கள்; நீலநக்கர் தனியே இல்லத்தில் உறங்கினர்; பெருமான் கனவிடை எழுந்தருளினர்; "உமதுமனைவியார் ஊதிப்போக்கிய இடம் தவிரப்பிற இடங்களிலெல்லாம் சிலம்பியின் கொப்புளங்கள் தோன்றியுள்ளன; காண்க" எனத்தம் திருமேனி காட்டினர். பொழுது புலர்ந்தது; நீலநக்கர் திருக்கோயிலுக்கு விரைந்தார்; இறைவனைத் தொழுதார். மனைவியை அழைத்து வந்தார். முன்னையினும் பெருமகிழ்ச்சியோடு பெருமானுக்குப் பூசனை புரிந்து வாழ்ந்தார்.

நீலநக்கர் இங்ஙனம் தொண்டு புரிந்து வருங்கால் ஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்றார். அவரை வணங்க விரும்பினர். திருஞானசம்பந்தரும் தலயாத்திரையாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணியாருடன் சாத்தமங்கைக்கு அருகில் வருதல் பற்றிக் கேள்வியுற்றார். உரிய முறையோடு எதிர் கொண்டு அழைத்தார். வணங்கிச் சிறப்பாக வரவேற்று வழிபட்டார். அடியார் பலரும் அங்கு உற்றனர்.

முத்தீ வேட்கும் அந்தணராகிய நீலநக்கர் யாழ்ப்பாணர் உள்ளிட்ட அடியார்களை வழிபட்டுத் திருவமுது செய்வித்தமையையும், தம் இல்லத்தில் வேள்விச் சாலையில் யாழ்ப்பாணருக்கும் அவர் மனைவியாருக்கும் தங்க இடம் கொடுத்தமையையும் குறிப்பிட்ட குருமணிகள் நம் சமயத்தின் சிறப்பினை இனிது விளக்கினர்கள்.

சிவபூஜை, அடியார் வழிபாடு என்னும் இருவகை நெறியும் நீலநக்கர் மேற்கொண்டமையைப் பகுத்து உணர்த்திய குருமணிகள் நீலநக்கர் அவதாரத் தலமாகிய சாத்தமங்கையில் முத்தீயோடு கற்புத் தீயாகிய நான்காவது தீ வளர்க்கப்பட்டது எனச் சேக்கிழார் அருளியமையைக் குறித்துக் காட்டி இன்றைய சமுதாயம் இத்தகு நெறியை வளர்க்க வேண்டும் என ஆசீர் வதித்தார்கள்.

முத்தீவளர்த்தல் பற்றியபலகுறிப்புக்களை வேதநெறியோடு விளக்கித் திருவிசைப்பாவில் இக்குறிப்பு இருத்தலைச் சுட்டினார்கள்.

சாத்திர, தோத்திர, புராணதத்துவச் செறிவோடு பல நுட்பமான கருத்துக்கள் அன்றைய உபதேசத்தில் இடம் பெற்றன. இங்குச் சிலவே குறிக்கப்பெற்றன; சில கருத்துக்கள் குறிப்புக்களாகத் தரப்பெற்றன. நேரில் கேட்கும் போது கிடைக்கும் பயன் கட்டுரையில் கிடைப்பது அரிதே! பாக்கியம் உடையோர் பயன் கொள்க.

உபதேசம் நிறைந்தது! கனிச்சாறு தாகத்தை நிறைத்தது! சாந்தம் மனத்தில் நிறைந்தது!

**நால் வேதத் திறமுரைக்கும்**

**நற்குருவின் தாள்வாழ்க!**

---

விஞ்ஞானம், சமயம் இல்லை என்றால் முடம்பட்டதாகும். சமயம், விஞ்ஞானம் இல்லையேல் குருட்டுத்தனமாகும்.

— ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

கடவுளது பேரருளை அறிந்துகொள்ளவும் அதனை நம் வாழ்வின் மையமாகக்கொள்ளவும்தான் நாம் இவ்வுலகில் வாழ்கிறோம என்பதை அறிக.

— ஜான் பண்டிங்.

பிரார்த்தனை என்பது இவ்வுலகில் நிலவும் பெரிய சக்திகளில் ஒன்றாகும். ஏனெனில் அதுதான் மானுடம் தெய்வீகத்துட்புக நுழைவு வாசலாக உள்ளது. அதுவே நம் வாழ்வினைத் தெய்வீகத்தோடு கலந்துநிற்க உதவுகிறது.

— ஜேம்ஸ் ஆலன்.

திருவுத்தரகோசமங்கைத் தலபுராணத்தில்

# திருத்தருமையாதீனச் சிறப்பு

## வித்துவான் திரு. த. குருசாமி

### முன்னுரை :-

காலங்கள் தோறும் தமிழ் வளர்த்த பெருமை உடையது தருமையாதீனம். ஞானப்பொருளே பேணும் ஞானப்பண்ணை யினில் கற்றுவல்ல பெரும் புலவர்கள் பலர் நூலாசிரியர்களாக ஒளிர்கின்றனர். குமரகுருபரர் வெள்ளியம்பலவாண முனிவர் முதலியோர் தனிச்சிறப்பு உடையவர்கள். அருணசல புராணம் பாடிய சைவ எல்லப்பநாவலர், புள்ளிக்குவேளூர்த்தலபுராணம் பாடிய படிக்காசுத் தம்பிரான் முதலியோர் தருமையாதீனம் தந்த தமிழ்ப்புலவர்களாவர். இது போலவே திருவுத்தர கோச மங்கைத் தலபுராணம் பாடியவர் தருமையாதீனத் திருக் கூட்டத்து அடியவரில் ஒருவர். இவர் பற்றிய சிந்தனையைக் குருவருள் கூட்டி வைத்தது.

### உத்தர கோசமங்கை :

மதுரைக்குருஞானசம்பந்தர் பணிமன்றம்சார்பில் 17—3—85 ஆம் நாள் உத்தரகோசமங்கைத் தலப்பயண படனமும், வழிபாடும் நிகழ்த்தியகாலே, அவ்வூர்த்தலபுராணம் திருவருளால் வாங்கப் பெற்றபோது, அத்தல புராணம் பாடியவர் ‘ தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி ஞானசம்பந்ததேசிகருடைய சிஷ்யர் ஒருவர் ’ என்று முகப்பட்டையில் குறிக்கப்பட்டிருந்தது. வியப்புற்ற எங்கள் பணிமன்ற அன்பர்கள் உத்தரகோசமங்கை யிலும் குருவருளின் பெருமை பிறங்குவது கண்டு மகிழ்ச்சி உற்றேம். உத்தரம் - உபதேசம்; கோசம் - இரகசியம்; மங்கை - மங்கலநாயகி. உபதேசமாக பிரணவ இரகசியப் பொருளை மங்களேசுவரிக்கு இறையனர் அருளிச்செய்த இடம் இத்தலம் என்று பொருள் கூறப்படுகிறது.

### திருவிளையாடற் புராணத்தலம் :

திருவிளையாடற்புராண வலை வீசிய படலத்தில் வருகின்ற கடற்கரைப் பகுதி, உத்தரகோசமங்கைக்கு அண்மையில் உள்ளது. சொக்கலிங்கப் பெருமான் அம்பிகையைப் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாப விமோசனம் செய்து, மணந்து இத்தலத்திலேயே தங்கி வேதப்பொருளைப் பிராட்டியார்க்கு

உபதேசம் செய்தும் அத்தலத்திலிருந்து சிவனடியார்கள் சிவயோகிகள் அறுபதினாயிரவர்க்கு ஞானோபதேசம் செய்து வீடுநல்கியும் அங்கயற்கண் நங்கையோடு மதுரைசார்ந்ததாகப் புராணம் கூறுவதை நாமறிவோம்.

" விண்ணிடை நின்ருன் சென்ருன் வேத்திரப் படையா னேடும்
உண்ணிறை யன்பரோடும் உத்தர கோச மங்கை "

என்று பரஞ்சோதியார் திருவாக்கில் சுட்டப்படுகிறது.

## உத்தரகோசமங்கைச் சிறப்பு :

இத்தலத்திற்கு உத்தரகோசமங்கைப் பெயர் ஏற்பட்ட காரணத்தைத் தலபுராணத்தின் வலை வீசின அத்தியாயத்தில் காணலாம். இத்தலத் தலவிருட்சம் ' இலந்தை ' யாகும்; வட மொழியில் ' பதிரி ' என்பர். இத்தலம் அக்காலத்தில் இலந்தை வனமாக இருந்தபடியால் ' வெதிரி காரணியம் ' என்ற பெயரை உடையதாயிற்று.

' மதுவளர் பொழில் திரு உத்தரகோசமங்கை ' என்றும், " உத்தம மாவளங்கொள் உத்தரகோசமங்கை – உற்றினிதாய் இருந்த பெருமாளே " –என்றும் முறையேமாணிக்கவாசகராலும் அருணகிரியாராலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருவாசகம் ' நீத்தல் விண்ணப்பம் ' உத்தரகோசமங்கையில் அருளியது; ' திருப்பொன்னூசல் ' தில்லையில் பாடினுலும், உத்தரகோச மங்கையே முதலிடம் வகிக்கிறது.

## தலப்பழமை :

சங்க இலக்கியப் புறநானூற்றில் இலவந்திகைப் பள்ளி என்று சுட்டப்படுவது இத்தலத்தையே என்பதற்கு இங்குள்ள கல்வெட்டுகள் சான்றுபகர்கின்றன. ' இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் ' என்ற பாடல் பெற்ற வேந்தன் பாண்டி நாட்டின் தலைசிறந்த சிவம் போற்றும் செந்நெறி பற்றியவனுகக் காணப்படுகின்ருன். புறம் 55–ம் பாடல் சிறந்த சான்ருக உள்ளது.

## நூலாசிரியரின் குருவணக்கம் :

திருவுத்தரக்கோசமங்கைத் தலபுராணத்தை ஆய்ந்து வெளியிட்ட பசும்பொன்புலவர் ஆறுமுகம் பிள்ளை என்பவர் இந்நூலை இயற்றியவர் தருமையாதீனத் திருக்கூட்டத் தம்பிரான் என்றே கூறுகின்ருர். நூலின் வாழ்த்துப்பாடல்

" ஆசில்சீரகச்சமயக் கமலங்கள் வாய்திறப்பஅவிச்சை என்னும் முசுபேரிருள்கரப்பப் புறச்சமயக் குமுதங்கள் முகங் கூம்பத் தேசுலாஞ்சிவஞானச் சுடர்பரப்பி இரவிஎனத் திகழுந்தன்மை மாசிலா மணிஞானசம்பந்தன் பூங்கழல்கள் வணங்கல் செய்வாம் "

என்று காணப்படுகிறது.

இச்செய்யுள் மூலமாக இந்நூலாசிரியர் தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர் என்பதை அறியலாம்.

## நூலின் உட்பகுதியில் குருவைப் போற்றுதல் :

தலபுராணம், அரித்துவசன் சாபந்தீர்த்த பகுதியில், பாம்பும் கீரியும் பகையின்றி உலாவும்; மானும் புலியும் மருவி வாழ்வதும் தருமையம்பதி; மாசிலாமணி ஞானசம்பந்த பரமாசாரிய தேசிகரது கருணைபொழியும் திருமுகத்தைத் தரிசிப்போர்களுடைய பாசபந்த நோய் அகல்வது போல, தன்னை வந்தடைந்து சேவிப்பவர்களது பாசத்தை அகல்வது போல, தன்னை வந்தடைந்தவரது பிறவிப் பிணியைப் போக்குவது இத் தலம் என்னும் பொருளில் நூலாசிரியர்,

"மானுழுவை கலுழரை வேனையவும் பகைதீர்ந்து மருவிவாழும்"

என்றும்,

" மாசிலாமணி ஞானசம்பந்தன் கருணைபொழி,
வதனங் கண்டோர்
பாசநோன் பிணிதுரப்ப தெனப்பதியை
அடைந்தவர் வெம்படு நோய்மாற்றும் " ,

என்றும் பாடியுள்ளார்.

## பிற சிறப்புக்கள்:

ஞான தேசிகனிடம் பெறும் உபதேசம் சிவமாக்கும் என்ற பொருளில்,

" தேசிகன் விதியிற்கூறச் செவிநுழைந் தயம் புங்கால்
ஆசில் ஐந்தெழுத்தும் பெற்றோன் உருத்திரன் ஐயமின்று "

என்றும் சினமும் ஆசையும் நீத்தவர் சிவலோகம்சேர்வர் என்ற பொருளில்,

செற்றமும் விழைவும் நீத்துச்
சிவனடிக் கன்பு பூண்டோர்
முற்றமுன் தவத்தால் யாவர்
குலத்திடை முளைத்தா ரேனும்
மற்றவர் மரபினுள்ளார்
அனைவரும் மதியம் பூத்த
கற்றைவார் சடைக்காட் டெண்டோட்
கடவுள் தன் புரத்திற் சார்வார்

என்றும் ஆசிரியரால் கூறப்படுகின்றன. 'ஆசையறாய் பாசம் விடாய்' என்ற குருமுதல்வரின் வாக்கினை இப்பாடல் விளக்கிக் காட்டுகிறது.

## தலபுராண அடக்கம் :

பதினோரத்தியாயங்களாகப் பிரித்து 500 க்குட்பட்ட பாடல்கள் உடையதாகத் தலபுராணம் விளக்குகிறது. இத்தலபுராணம் விற்பனைக்குக் கிடைக்கிறது. இங்குள்ள அம்பிகை மீது பாடப்பட்ட மங்களேசுவரி பிள்ளைத் தமிழ் குமரகுருபரர் பாடியதாகக் கூறப்படுகிறது. இந்நூல் கிடைப்பதரிதாக உள்ளது.

## நூலாசிரியரின் பெருமை:

தலபுராண ஆசிரியர் சைவமரபின் உபதேசம் பெற்ற பெருமையுடையவர். இவர் பாக்கள் சில இடங்களில் ஆழ்ந்த பொருளுடையனவாக உள்ளன. இத்தலபுராண ஆசிரியர் பெயரும் வேண்டாது குருபக்தியே துணையெனக் கொண்ட பெருமையை இந்நூல் விளக்கிக் காட்டுகிறது. இந்நூலாசிரியர் புராணம் மூலமாக அறியப்படும் செய்திகள் தனியாகச் சிந்தனைக் குரியவை.

## முடிவுரை;

திருவுத்தரகோசமங்கை பழமையான சிவத்தலம். தட்சண கயிலாயம் என்பர். மரகதநடராசர் சந்நிதி தனிச் சிறப்புடையது. மாணிக்கவாசகரால் பாடப்பட்ட பதி. 'மண்முந்தியோ மங்கை முந்தியோ?' என்றபழமொழி இங்கு அதிகமாகக் கூறப்படுகிறது. மாணிக்கவாசகரின் முன்னைத் திருக்கோல (முற்பிறவி)க் காட்சி கண்டு வணங்குதற்குரியது. இங்கு அக்கினி தீர்த்தத்தில் மூழ்கி அருந்தவம் ஆற்றியே வாதவூரராக வந்தார் என்று செவிவழிச் செய்திதக்க ஆதாரக் கோயிலோடு கூறப்படுகிறது. ஈண்டு அப் பொருளில் தலைப்படாமல் தலபுராண ஆசிரியரின் குருபக்தியை மட்டுமே சிந்திக்கலாயிற்று.

# மௌனமாய்ப் பேசும் மூர்த்தி

தன்னொளி விளங்கும் மௌனம் தழைத்திடும் அறிவாம் சோதி
தென்முகக் கடவுளான தேவனைச் சிந்தை செய்வாம். 1

பேச்சினால் இருள்ப ரப்பும் பேதையர் மலிஞா லத்தில்
பேச்சிலாப் பேச்சாம் மௌனம் பேசியே ஒளிவி ரித்தோன். 2

உரையெனும் திரையும் நெஞ்சின் உணர்வெனும் திரையும்
[இன்றிப்
புரையற மௌன ஞானம் போதிக்கும் சோதி யானோன். 3

நினைவெனுந் திரையும் வாக்கின் நிலையெனுந் திரையும் நீங்கப்
புனைவிலா இயல்பாம் மௌனம் பொலிந்திடுந் தென்முகத்தோன்.

பூரண மௌன மான போதத்தை இருந்த வாறே
ஆரணங் கண்டுந் தேறார்க்(கு) அறிவித்த ஞான சோதி. 5

வாக்கினால் விளங்கா மௌனம் மனத்தினால் விளங்காமௌனம்
நீக்கமில் ஞான மௌனம் நின்மலன் வடிவ மன்றோ? 6

வாக்கெனில் நான்மு கத்தோன் மனமெனில் திருமா லாகும்
வாக்கொடு மனமுங் காணா மௌனமே தென்மு கத்தோன். 7

மனமெனுந் தந்தை பெற்ற வாக்கெனும் புதல்வ னோடு
தினந்தினம் தேடிக் காணாத் தென்முக மௌன சோதி. 8

நால்வர்க்கு மௌன மான நல்லொளி நெறியைக் காட்டும்
ஆலமர் கடவு ளேஉன் அடியிணை போற்றி போற்றி. 9

திருக்கையின் விரலி னாலே சின்முத்திரைச் சிறப்பைப்
பெருக்கவே விளக்கும் பெம்மான் மௌனமாய்ப் பேசும்
[மூர்த்தி! 10

---

— எஸ். சாயிராம்

# அரசாங்கம் பற்றி அறிஞர் பெருமக்கள்

**முறைசெய்யாத அரசனுடைய கொடுங்கோல் ஆட்சியின் கீழ் இருக்கப்பெற்றால், பொருள் இல்லாத வறுமை நிலையைவிடச் செல்வநிலை துன்பமயமானது.**

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

— திருவள்ளுவர் (திருக் - 558)

★

ஓர் அடக்குமுறை அரசாங்கம், ஒரு புலியைக் கண்டால் ஏற்படும் பயத்தை விட, பயங்கரமானது. — கன்பியூஸியஸ்

★

ஒரு நாட்டு மக்களுக்கு, பலவீனமானதோர் அரசாங்கம் அமைதல், எல்லாக் கேடுகளையும் விடப் பெரிய கேடாக இருக்கும். — பென்சமின் டிஸரேலி

★

பரிபூரணமான மேலான நாகரீகம் என்பது, அரசாங்கம் ஆட்சிசெய்ய மிகவும் குறைந்த வாய்ப்பை எடுத்துக்கொள்ளும் நிலைமையே ஆகும். — தாமஸ்பெயின்

★

கடவுளால் நாம் ஆளப்படும் நிலை அமையவில்லை என்றால் கண்டிப்பாகக் கொடுங்கோலர்களால் ஆளப்படும் நிலை தான் ஏற்படும். — வில்லியம் பெயின்

★

அரசாங்கம் என்பதுமானிடசமுதாயத் தேவைகளை நிறைவு செய்ய, மானிட அறிவால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாபெரும் சாதனமே ஆகும். — எட்மண்ட் பர்க்

★

ஆட்சி என்பது பொதுஜன நன்மைக்காகச் செய்யப் படுவதே அன்றி, பொது ஜன அபிப்பிராயத்திற்காக அன்று.

— முதலாவது சார்லஸ்.

அரசாங்கத்தின் நான்கு தூண்களாகிய சமயம், நீதி நெறி, நேர்மை, பொக்கிசச்சாலை, இவற்றில் ஏதாவது ஒன்று அடிப்படையிலே ஆட்டம் கண்டாலோ, பலவீனப்பட்டுப் போனலோ, நல்ல சூழ்நிலையைக் கோரி நாயகனுகிய இறைவனை வேண்டித் துதிப்பது அன்றி வேறு வழி கிடையாது.

— பிரான்ஸிஸ் பேகன்.

★

நடைமுறையில் நம் ஆட்சி பொதுமக்கள் அபிப்பிராயத்தை அனுசரித்தே உள்ளது. யாரால் பொதுமக்கள் அபிப்பிராயத்தை மாற்றமுடியுமோ அவர்களால்தான் அப்போது நடைமுறையில் இருக்கும் ஆட்சியையும் மாற்ற இயலும்.

— ஆப்ரகாம் லின்கான்

★

ஒருநாட்டின் அரசாங்கத்தின் மிக உறுதியான தூண் யாதோ எனில், அந்நாட்டின் நீதித்துறை சரியானபடி நிர்வகிக்கப்படும் நிலைமையே ஆகும்.

— ஜார்ஜ் வாஷிங்டன்

---

## நலன்தரும் ஞானபுரீசன்

**கவிஞர் திரு. காராளன்: கோவை.**

நலம்தருவான் எங்கள் ஞானபுரீசன் — வேண்டும்
வரம்தருவான் மலர்ப் பதம்தருவான் — வாழ்வில் (நலம்)

ஞானம் பிகைஉடன் அமர்ந்திருப்பான் — நல்
அன்பும் அறிவாக மலர்ந்திருப்பான் — வாழ்வில் (நலம்)

உயர்ஞான ஒளியேற்றும் குருவானவன் — உலகில்
உயிர்யாவும் பகைநீங்க அருள் வானவன்
தவமோன எழிலோங்கும் உருவானவன் — தன்
தாள்தந்து பேரின்பம் தருவானவன் — வாழ்வில் (நலம்)

# செய்திகள்

## குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்து வருகிறது. 5—5—85 அன்று 47-ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் வழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்வுற்றன. திருத்தொண்டர் புராண வரிசையில் இம்மாதம் நமிநந்தி அடிகள் பற்றிய சிந்தனை; குருமணிகள் தம் உபதேசத்தில் ......

நமிநந்தி அடிகள் வரலாற்றினை விரிவாகவும் விளக்கமாகவும் திருவாய்மலர்ந்தருளினார்கள். ஏமப்பேறூர் சிறப்பினையும் எள்ளிநகையாடிய சமணர்கள் வியப்புற பெருமான் திருவருளால் நீர்கொண்டு விளக்கெரித்தமையை விளக்கியருளினார்கள், மணலிக்கு எழுந்தருளிய பெருமானுடன் சென்று மீண்டு வந்து பல்லோருடன் சென்றமையின் இழிவு தொடக்குற்றதாக முன் வாயிலிலேயே உறங்கிவிட்டமையையும் இறைவன் கனவில் காட்சியளித்து ஆரூரில் பிறந்தார் அனைவருமே தம்அடியார்கள் என்றருளியதனை உணர்ந்து எழுந்து உடனே பூசையினைத் தொடங்கியருளியதிறத்தினையும்விள க்கியருளினார்கள். சிறப்பாக ஆரூரில் பிறந்தார் அனைவருமே அடியார் ஆகும்பேறு பெற்றனர் என்றமையில் வழுவாது அதற்குரிய தகுதியோடும் உணர்தல் வேண்டும் என்றும் உணர்த்தி அருளினார்கள்.

திருமயிலாடுதுறை அன்பர்களும் பக்தர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 48-ஆம் அருளுபதேசம் 2—6—85 அன்று நிகழவுள்ளது. அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுக.

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

**திருக்கடவூரில் :**

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் ஆண்டு ஜென்ம நட்சத்திர ஆயில்யத் திருநாள் வழிபாடு

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் மிருத்யுஞ்சய ஹோமம், ஏகாதச ருத்ர ஜபம் முதலியவற்றுடன் 28—4—85 ஞாயிற்றுக் கிழமையன்று மிகச் சிறப்பாக நடை பெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி, அபிராபியம்மைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அருச்சனையும், ஸ்ரீ கால சம்கார மூர்த்திக்கு, சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். ஆண்டு ஜென்மநட்சத்திர விழா மலராகப் "பஞ்சாக்கரத் திருப்பதிகங்கள்" என்ற நூல் வெளியிடப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் வழிபாட்டிற் கலந்து கொண்ட அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

திருப்பாதிரிப்புலியூரில் :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் ஜென்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் திங்கள்தோறும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. சித்திரைத் திங்கள் 16–ஆம் நாள் 28—4—85 ஞாயிறன்று திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு பாடலீசுவரர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப்பாராயணமும் நிகழ்த்தப் பெற்றன. 'திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., உரை ஆற்றினார். அன்பர்கள் பலர் வழிபாட்டிற் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜை

சந்தான குரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜை விழா சித்திரை அஸ்தநாள் கூடிய 2—5—85 வியாழக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர், சந்தானாசாரியர்களுக்குக் காலை 9 மணி அளவில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. தருமையாதீனத்தின் சார்பில் சிதம்பரம் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் திருமடத்தில் பகலில் அபிஷேக ஆராதனைகளும் மாலை 6 மணி அளவில் தில்லைத் திருக்கோயிலில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு சகஸ்ர நாமார்ச்சனையும் நடைபெற்றன. தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் மாலை 7 மணி அளவில்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., ஸ்ரீஉமாபதிதேவர் அருள்வரலாறும் போற்றிப் பஃறொடையும் என்பது பற்றியும், டாக்டர் திரு. மு. சிவசந்திரன், எம்.ஏ., பிஎச். டி., பி. எட்., சிவப்பிரகாசம்பற்றியும்சொற்பொழிவு ஆற்றினர். அன்பர் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## சித்திரைப் பெருவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமானசீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 24—4—85 முதல் சித்திரைத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. சித்திரை 13 ஆம் நாள் ( 25—4—85 ) வியாழன் அன்று திருமுலைப்பால்விழா. அன்று காலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் சிவிகையில் எழுந்தருளியானவுடன் அற்புத விளக்கச் சொற்பொழிவுகளும் திருப்பதிகம் ஓதுதலும் நடைபெற்றன. பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளியானவுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிக்கல் திரு. வை. கல்யாணசுந்தரதேசிகர் அவர்கட்குத்'திருமுறைக்கலாநிதி' என்னும் பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கி 1001 ரூபாய் அடங்கிய பொற்கிழி அளித்துப் பொன்னுடை போர்த்திச் சிறப்புச் செய்தருளினார்கள்.

சித்திரைத் திருவிழா நாட்களில் கருத்தரங்கம், கவியரங்கம் பட்டிமன்றம், வழக்காடு மன்றம் திருமுறைவகுப்பு ஆண்டு விழா, திருமுறை இசையரங்கம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### திருக்கடவூரில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைப் பெருவிழா 24—4—85 முதல் தொடங்கி நடைபெற்றது. 29—4—85 காலசம்காரத் திருநாளன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு பிரசாதம் வழங்கினார்கள். உற்சவ நாட்களில் சொற்பொழிவுகளும் இன்னிசை விரிவுரையும் நிகழ்வுற்றன. 27—4—85 அன்று திருமுறை விழாவும் தேவாரவகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தன.

### திருப்பனந்தாளில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 24—4—85

முதல் சித்திரைப் பெருவிழா மிகச்சிறப்பான முறையில் நடை பெற்றது. உற்சவ நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நிகழ்வுற்றன. அன்பர்பலர் சுவாமிதரிசனம் செய்து சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

திருவையாற்றில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயிலில் 24—4—85 அன்று தொடங்கிச் சித்திரைப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. தன்னைத்தான் அர்ச்சித்தல், சகோபுரக் காட்சி, ஏழூர் வலம் வரல் முதலிய விசேஷத் திருநாட்கள் நிகழ்வுற்றன. உற்சவநாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. அன்பர்பலர் வழிபாடாற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## சீகாழியில்

## திருஞானசம்பந்தர் திருமண மண்டபத் திறப்புவிழா

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ ஞானசம்பந்தர் காலனியில் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள திருஞானசம்பந்தர் திருமண மண்டபத் திறப்புவிழா, 24—4—85 புதன் கிழமையன்று மாலை 7-30 மணிக்குத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாசியுடன் நடைபெற்றது. விழாவிற்குக் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் 45 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையேற்றருளினார்கள். தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை இ. ஆ. ப. அவர்கள் திருமண மண்டபத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார்கள். மயிலாடுதுறை, அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. என். சீனுவாசன், பி. ஏ., பி. எல்., அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு கேட்டும் மகிழ்ந்தனர்.

# கதிரவன் குடும்பம்

## 6. வியாழன் கிரகம்

சூரியமண்டலத்தில் ஆறுவது பிராகாரத்தில் செவ்வாய்க்கு அடுத்து விளங்கும் வியாழன் என்பது. இஃது ஒரு வெளிநிலைக் கோளாகும் (Outer Planet). இக்கிரகத்தைத் தமிழில் பொன், குரு, தேவகுரு, பிரகஸ்பதி, இராஜா எனப் பலபெயரில் அழைப்பதுண்டு. ஆங்கிலத்தில் வியாழன் கிரகம் 'ஜூபிடர்' (Jupiter) எனக் கிரேக்கப் போர்க் கடவுளின் பெயரால் அழைக்கப்படுகிறது. இது வான வெளியில் அழகாக விளங்கும் கிரகங்களில் ஒன்றாகும்.

கதிரவன் மண்டலத்தில் (Solar system) கதிரவனுக்கு அடுத்தபடியாக உருவத்தால் பெரிதாக உயர்ந்து விளங்குவது ஜூபிடர் தான். சுக்கிரன் நீங்கலாக, ஏனைய கோள்கள் எல்லாவற்றினும் இதுவே மிக்க பிரகாசம் பொருந்தியதாகும். சுக்கிரனுக்கு இணையாகப்பேரழகுடனும் பேரொளியுடனும் நம்கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் பொன்விளக்கு போல வானத்தில் பொருந்தி விளங்கி அணி செய்வது இந்தக் கோள் ஒன்றே ஆகும். தொலை நோக்கியில் உற்று நோக்கும் போது இதன் வனப்பு, வானத்தை வண்ணம் செய்வதாக விளங்குகிறது இக்கிரகத்தின் மேல்பகுதி பசும் பொன்போலப் பகட்டாக விளங்குவதால் இதனைப் "பொன்னன்" என நம்மவர் போற்றி மகிழ்ந்தனர்.

வியாழனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள சராசரித் தொலைவு 48, 33, 00, 000 (நாற்பத்து எட்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சம்) மைல். இது சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தொலைவைப்போன்று சுமார் ஐந்து மடங்கு அதிகம், ஜூபிடர் பூமிக்கு மிக அண்மையில் வருங்கால் 36, 70, 00, 000 (முப்பத்தாறு கோடியே எழுபது இலட்சம்) மைல் தொலைவிலும், தூரத்தில் இருக்கும் கால் 60, 00, 00, 000 ( அறுபது கோடி ) மைல் தொலைவிலும் உள்ளது. இக்கிரகத்தின் குறுக்குவிட்டம் (Diametre) 88, 700 மைல். துருவத்திற்குத்துருவம் 82, 900 மைல் ஆகும். பூமி ஒருகடுகளவு எனக்கொண்டால் வியாழன் ஒரு சுண்டைக்காய் அளவு உள்ளதாகும். ஜூபிடரின் மேற்பரப்பு பூமியின்

மேற்பரப்பு அளவை விடப் பதினொருமடங்கு பெரியதாகும். பரிமாணத்தில் இக்கிரகம் பூமியைவிடச் சுமார் 1400 மடங்குக்கு அதிகமாக உள்ளது. இதன் எடையோ பூமியின் எடையைவிடச் சுமார் 315 மடங்கு அதிகமாக உள்ளது. இக்கிரகத்தின் திண்மை நீரின் திண்மையைவிட ஒன்றேகால் மடங்கு அதிகமாகும். எனினும் இதன் மேல்பரப்பில் பூமியின் மேற்பரப்பில் உள்ளதை விடப் பொருட்கவர்ச்சி (Gravitation) யின் விசை இரண்டரை மடங்கு அதிகம். பூமியின் மீது 100 பவுண்டு எடையுள்ள ஒரு மனிதனின் எடை, வியாழன் கிரகத்தில் சுமார் 250 பவுண்டு இருக்கும். இக்கோள் ஒன்பது மணி ஐம்பது நிமிடங்களில் தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக்கொள்ளுகிறது. சூரியனை ஜுபிடர் ஒரு முறை முழுதாகச் சுற்றிவரப் பன்னிரண்டு ஆண்டுக்காலம் ஆகும். இக்கிரகத்தில் ஓர் ஆண்டு என்பது நமக்குப் பன்னிரண்டு ஆண்டுகள். பூமி தன் சுற்றுப்பயணத்தில் இக்கிரகத்தைப் பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில் பன்னிரண்டு தடவைகள் சந்திக்கின்றது.

ஜுபிடர் கிரகத்தின் மேற்பரப்பின் மீது காற்றுமண்டலம் கவிந்திருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. இக்காற்று மண்டலத்தின் அடித்தலத்தில் நீரும் உறைபணியும் அமைந்திருக்கக்கூடும் எனவும் கருதப்படுகிறது. இதன் மேற்பரப்பின் சராசரிவெப்பநிலை – 130 °C வரை இருக்கலாம் எனத்தெரிகிறது. நிறமாலைமானி (Spectroscope) மூலம் இக்கிரகத்தின் காற்று மண்டலத்தைச் சோதித்ததில் இதில் அமோனியா வாயுவும், மீதேன் என்ற வாயுவும் இருத்தல்வேண்டும் என்பது உறுதிப் பட்டது. இவ்வாயுக்கள் இரண்டும் நச்சுத்தன்மை வாய்ந்தவை யாகையால் இங்கே யாதொரு உயிர் வாழ்க்கையும் நடைபெறுவதற்கு வாய்ப்பே கிடையாது என்பது உறுதி.

ஜுபிடரைச் சுற்றிச் சுமார் ஒன்பது துணைக்கோள்கள் (Sub – Planets) ஓடிவந்துகொண்டு உள்ளன – சில விஞ்ஞானிகள் பன்னிரண்டு கோள்கள் எனவும் கருதுகின்றனர். நம் பூமியைச் சந்திரன் சுற்றுவது போல வியாழனை இத் துணைக்கோள்கள் சுற்றுகின்றன. முதல் முதலாக கலிலியோ என்ற வானியல் விஞ்ஞானி 1610 ல் தம்முடைய தொலைநோக்கியின் மூலம் நான்கு துணைக்கோள்களைக்கண்டார். இவற்றிற்கு ஐயோ (Io( யுரோப்பா (Europa), கானிமீட் (Ganemede), காலிஸ்ட்டோ (Galisto) எனப் பெயர் வழங்குகின்றது. இப்பெயர்கள் பழங்காலக் கதைகளில் ஜுபிட்டர் என்ற கிரேக்கப் போர்த்தெய்வத்தோடு சம்பந்தப்பட்ட நான்கு முக்கிய பாத்திரங்களின்

பெயர்களாகும். இத் துணைக்கோள்களில் ஒன்றன் குறுக்களவு 1960 மைல்;மற்றொன்றின் குறுக்களவு 2320 மைல்; மற்ற இரண்டு அம்புலிகள் புதன் அளவுக்குப் பருமன் உள்ளவை. இவை ஒவ்வொன்றும் 3200 மைல் குறுக்குவிட்டம் உள்ளவை. ஏனைய துணைக்கிரகங்கள் மிகவும் எதிர்ப்புறமாகச் சுற்றுகின்றன.

ஜுபிடர் என்ற வியாழன் கிரகம் சூரியமண்டலத்தினைப் போல ஒரு தனிக் குடும்பம் போன்றது. அதன் ஈர்ப்புசக்தியால் அதனைப் பன்னிரு கிரகங்கள் சுற்றுவதென்றால் - மோதிக் கொள்ளாமல் உலவிவருகின்றன என்றால் படைப்பின் பாலிப்பு நமக்கு நன்றாக விளங்குகிறதன்றோ? இறைவனின் சிருஷ்டியின் சிறப்பு நன்கு புலனாகிறது.

— தொகுத்தளித்தவர் : சுவாமி வீரபாகு.

ஆதாரம் :

The Captives of the Sun
A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

---

ஒரு நல்ல தாய் நூறு பள்ளி ஆசிரியர்கட்குச் சமம். தாய் மூலம் தான் இதயம் விரிகிறது - அறிவு வளர்கிறது.

— சாம்யூல் ஸ்மைல்ஸ்.

செல்வம் உடையவராய் இருத்தல் ஓர் அரிய பெரிய சோதனை ஆகும். சாதாரணமாக, செல்வம் ஒருநல்லவனுக்கு உதவிகரமாக இருக்கும். அதுவே ஒரு கெட்டவனை மேலும் கெட்டவனாக ஆக்கி விடும்.

— ஹெர்பர்ட் கேஸன்.

கல்லாமல் இருப்பதைவிடப் பிறவாமல் இருப்பதே மேலானது. ஏனெனில் அறியாமை எல்லா துர்ப்பாக்கியங்களுக்கும் ஆணிவேர் ஆகும்.

— பிளேட்டோ.

கண்களுக்கு ஒளி எப்படியோ, சுவாசப் பைகளுக்குக் காற்று எப்படியோ, இதயத்திற்கு அன்பு எப்படியோ, அப்படி மனித ஆத்மாவுக்குச் சுதந்திரம் என்பதை அறியவேண்டும்.

— ஆர். இங்கர்சால்

# எதிர்காலம்

**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.**

## ( குரோதனஹு வைகாசிமீ 1உ முதல் 32உ முடிய )

## ( 14—5—1985 முதல் 14—6—1985 முடிய )

ஸ்ரீ குரோதனஹு வைகாசிமீ 1உ மங்களவாரம் பூரட்டாதி நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 25 நாழிகை 38 வினுடிக்கு கன்னியா லக்னத்தில் ஸ்ரீலோக ரட்சகரான சூரியபகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மேஷ ராசியில் இருந்து ரிஷப ராசி சங்கிரமணமாக வைகாசி மாதப்பிரவேசம்செய்தருளுகின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ய காலம். சங்கிரமகாலகிரகஸ்திதியினுல் லோகமெங்கும் சுபிட்சம் ஏற்படும்.

உலகமெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜயோகத்தில் திருவீற்றிருக்கின்ற ஈஸ்வரசித்தம் உள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் லோகத்திற்குச் சிவசமய ஆசாராதி நல்வழியினை தம் திருவாய்மலர்ந்து விமர்சனம் செய்து அருள்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பர்தங்களும் சுபபலன் தரும் தனவருமானம் கணிசமாகவந்துசேரும். கௌரவச்செலவுகளும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ் ஏற்படும். மேடைப்பிரசங்கம் நல்ல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல் ஆகும். ஜூன் 5 தேதி ஆனுல் வியாஜ்ஜிய வழக்குகளில் ஜெயபிராப்தியாகும். மே 15, 16 தேதிகளில் சுப விசேஷ செலவு ஆகும் ஜூன் 2, 3, தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். நவீன வஸ்துக்கள் வாங்குதல் ஆகும். டாம்பீகமாக செலவுகள் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நல்ல பிரயோஜனம் தந்துகொண்டிருக்கும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு நல்ல சம்பவங்கள் ஏற்படச் செய்யும். மே 18, 19, தேதிகளில் உற்றரால செலவு ஏற்படும். ஜூன் 4, 5 தேதிகள் சந்ராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். பெற்றோர் நலம் சகோதரர் நன்மைகளில் செலவினங்கள் ஏற்படச்செய்யும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் நன்றாக இருந்து வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் நல்லவிதத்தில் நடந்துகொண்டிருக்கும். மே 20, 21 தேதிகளில் நஷ்டம்ஏற்படும். ஜூன் 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய, புதன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். தன வருமானம் மூன்று விதங்களில் வந்துசேரும். இரத்தின பூஷணம் தரும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்புஏற்படுதல் நல் விஷயசம்பாஷனை செய்தல் ஆகும். புண்ணிய தீர்த்தப்பலன் கிடைக்கும். நல்ல வாகன பிராப்த்தியளிக்கும். எல்லாக்காரியங்களையும் துரிதப் போக்கில் நடத்தச்செய்யும். மே 22, 23 தேதிகளில் தர்மகாரிய செலவு ஆகும். ஜூன் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். தனவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு அரசாங்க நன்மை ஏற்படும். பந்மித்திரர்களின் வருகை நல்ல சம்பவம் நிகழ்தல் ஆகும். வீடுவாகனங்கள் பிராப்தியில் நல்ல சௌகரியம்தரும். எல்லாக்காரியங்களையும் அரசாங்க கண்யத்தில் கெடியாக நடத்தி வரும். மே 25, 26 தேதிகளில் செலவு ஏற்படும். மே 15, 16, ஜூன் 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நன்மைகளும் பிரபலஸ்திதியும் ஏற்படும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்து வரும். எல்லாக்காரியங்களும் உயர் மதிப்பில் நடத்துகொண்டிருக்கும். மே 27, 28 தேதிகள் அவசியசெலவை ஏற்படுத்தும். மே 17, 18, 19 ஜூன் 14 இத்தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வரும். மே 22 தேதிக்குமேல் பூர்வப் பொருள் பிராப்தியில் தஸதாவேஜுக்களில் நல்ல ஏற்பாடு நடக்கும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஸ்திரிவழியில் நல்ல காரியம் நடக்கும். மே 29, 30 தேதிகளில் சுப காரிய செலவு ஏற்படும். மே 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். பூஷணாங்களின் பிராப்தியையளிக்கும். இராசிக்கு ஓர் விபத்து ஏற்பட்டுத் தப்பும். எழுத்துமூல விஷயங்களில் ஜூன் 6 தேதி ஆனால் விசேஷ பலன் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மே 31 ஜூன் 1 இத்தேதிகளில் பணச்செலவு ஆகும். மே 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். தன வருமானம் மதிப்புடன் வரும். நவீன வஸ்துவின் பிராப்தியையளிக்கும். பசு பால் பிராப்தி திருப்தியளிக்கும். மே 20 தேதி ஆனால் வித்து வத்துவம் கலைத்துறைகளில் நன்மதிப்பு பிரபலஸ்தர்கள் போற்றுதல் ஏற்படும். எல்லாக்காரியங்களும் மனோபிலாஷையின்படி நடக்கும். ஜூன் 2, 3 தேதிகளில் சுப விசேஷ செலவு ஆகும். மே 24, 25, 26 தேதிகள் சந்திரஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாகவரும். ஒப்பந்த பத்திரங்கள் லேவா தேவிகளில் நல்லன ஏற்பட்டு வரும். நல்ல ஆபரணம் தரும். புத்திரி சம்பந்தமாக வருங்கால நிதி செய்விக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். ஜுன் 4, 5 தேதிகளில் அவசிய செலவு ஆகும். மே 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் மதிப்பாக வந்து சேரும். தெய்வக் கைங்கர்யம் செய்யும். ஓர் தர்மசொத்து நிர்வாக பிராப்தியாகும். மே 21 தேதிக்கு மேல் எழுத்துமூல விஷயங்களில் லேவாதேவிகளில் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தும். தாரப் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜுன் 6, 7 தேதிகளில் அவசியச் செலவை ஏற்படுத்தும். மே 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தனவருமானம் வெகுவாகவரும். இரத்தினபூஷணம்தரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தி வரும். நவீன வஸ்துவின் பிராப்தியை அளிக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் விரைவில் செயல் பட்டுக்கொண்டிருக்கும். ஜுன் 8, 9 தேதிகளில் அவசியச் செலவு ஆகும். மே 31 ஜுன் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

---

ஓர் உண்மையானபெரிய மனிதருக்கு மூன்று அடையாளங்கள் உண்டு-திட்டமிடுவதில் தாராளம், செயற்படுத்துவதில் மனிதாபிமானம், வெற்றிபெறுவதில் வெறிகொள்ளாமை ஆகிய மூன்றும் அவரிடம் காணப்படும்.

— பிஸ்மார்க்.

# உட்கொள்ளும உணவுப் பொருள்கள்

1. உடலுக்குச் சக்தியைக் கொடுப்பவை: இவை கார்போஹைடிரேட்டுகள் அல்லது மாவுப் பொருள்கள் எனப்படும். அரிசி, கோதுமை, சர்க்கரை போன்றவற்றுள் கார்போ ஹைடிரேட்டுகள் அதிகம் உள்ளன.

2. உடலுக்கு வெப்பத்தைக் கொடுப்பவை: இவை கொழுப்புப் பொருள்கள் எனப்படும். இவை சக்தியையும் தரவல்லன. வெண்ணெய், நெய், எண்ணெய் ஆகியவற்றுள் கொழுப்புப் பொருள்களில் சத்துக்கள் அதிகம் உள்ளன

3. உடலின் திசுக்களின் வளர்ச்சிக்கு உதவுபவை: இவை புரோட்டீன்கள் எனப்படும். பருப்புக்கள், இறைச்சி முதலியவற்றுள் புரோட்டீன்கள் அதிகம் உள்ளன.

4. எலும்பு, பல் இவற்றின் உறுதிக்கும், இரத்த விருத்திக்கும், சுத்தத்திற்கும் உதவுபவை தாதுஉப்புக்கள் எனப்படும். கீரைகள், காய்கறிகள், பழங்கள், சாதாரண உப்பு, சுண்ணும்பு இவற்றில் தாது உப்புக்கள் உள.

5. இரத்த ஓட்டம், ஜீரணம் முதலியவற்றுக்கு உதவுவது தண்ணீர் இதுநாம்உட்கொள்ளும்பழங்கள், கீரைகள், காய்கறிகள் இவற்றுள் உள்ளன.

6. மேற்கூறியவற்றைத் தவிர, உடல் ஆரோக்கியத்திற்குமிகவும் இன்றியமையாதவை; இவைவைட்டமின்கள் எனப்படும். உதவிப் பொருள்கள் கீரைகள், காய்கறிகள், பழங்கள், இவற்றில் வைட்டமின்கள் உள்ளன.

ஆதாரம்: மனித உடலின் விந்தைகள்
(லிப்கோ பதிப்பு)

அனைத்துலக சைவசித்தாந்த

ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி :

பாடம் – 4.

# சித்தாந்த சைவம்

## சித்தாந்த சைவமும் பிற சமயங்களும் :

உலகில் உள்ள பல சமயங்களில் ஒவ்வொன்றும் தனக்கே சிறப்பாக உள்ள சில கொள்கைகள் காரணமாகப் பிற சமயங்களினின்றும் தான் வேறுபட்டுத் தனித்து நிற்கின்றது. அம்முறையில் சித்தாந்த சைவமும் பல வகைகளில் பிற சமயங்களினின்றும் வேறுபட்டுத் தனித்து நிற்கின்றது.

அந்நிலையில் சித்தாந்த சைவம் கடவுட் கொள்கையை உறுதியாகக் கொள்வதால் முதலில், உலகாயத மதம் அல்லது நாத்திக மதத்தினின்றும் வேறுபட்டு நிற்கின்றது.

அடுத்து நோக்கும் பொழுது சித்தாந்தசைவம் வேதத்தைச் சிறந்த பிரமாண நூலாகக் கொள்வதால் ' சமணம், பௌத்தம் ' என்னும் புறச் சமயங்களினின்றும் வேறுபட்டு நிற்கின்றது.

வேதத்தை ஒப்புக்கொள்ளுகின்ற மதங்களில் பூர்வ மீமாஞ்சையும், நிரீச்சுரசாங்கியமும் கடவுளை ஒப்புக்கொள்ளாமையால், அவ்வகையில் சித்தாந்த சைவம் அவைகளினின்றும் வேறுபடுகின்றது.

வேதத்தை ஒப்புக்கொள்ளுகின்ற சமயங்களில், நியாயம், வைசேடிகம், வேதாந்தம், யோகம் என்னும் மதங்கள் ஆகமங்களை ஒப்புக்கொள்வதில்லை. சித்தாந்த சைவம், சைவாகமங்களைச் சிறப்புப் பிரமாணமாகக் கொள்கின்றது. அதனால் அது அவ்வகையில் மேற்கூறிய மதங்களினின்றும் வேறுபடுகின்றது.

ஆகமங்கள், சைவாகமம், வைணவ ஆகமம், சாக்த ஆகமம் முதலாகப்பலவகைப்படுகின்றன. அவற்றுள் சைவாகமங்களே வேதத்தோடு ஒத்து நிற்பனவாகவும், பிறஆகமங்கள் வேதத்துக்கு மாறுபட்டு நிற்பனவாகவும் சொல்லப்படுகின்றன அதனால் தந்திரம் என்னும் பெயர் எல்லா ஆகமங்கட்கும் பொதுவாய் இருப்பினும் அது சைவாகமம் தவிர ஏனை ஆகமங்கட்கே சிறப்பாக வைத்து வழங்கப்படுகின்றது. அதுபற்றி அந்த ஆகமங்களின் வழிப்பட்ட மதங்கள் தாந்திரிக மதங்கள் எனக் கூறப்படுகின்றன.

## தாந்திரிகமதங்கள்:

தாந்திரிக மதங்களில் பாஞ்சராத்திரம் எனப்படுகின்ற வைணவம் ஒன்று மட்டும் சைவாகமங்களைக் கொள்வதில்லை. அவற்றை அது சில இடங்களில் இகழவும் செய்கின்றது, ஏனைய தாந்திரிக மதங்கள் சைவாகமங்களை இகழாவிடினும் அவற்றைப் பொதுவாகவே தழுவித் தமக்கே உரிய தந்திரங்களையே சிறப்பாகப் போற்றுகின்றன. அவை, பாசுபதம், மாவிரதம், காபாலம், வைரவம், வாமம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் என்பன. சௌமியம் என்னும் ஒரு தாந்திரிக மதம் சொல்லப்படுகின்றது. சைவாகமங்களையே சிறப்புப் பிரமாணமாகக் கொள்வதால் சித்தாந்த சைவம் இத்தாந்திரிக மதங்கள் அனைத்தினும் வேறுபட்டு நிற்கின்றது.

தாந்திரிக மதங்களில் பாஞ்சராத்திரம் தவிர ஏனையவை சிவனை இகழாது போற்றுதலால் அவையும் ஓரளவில் 'சைவம்' எனப்படுகின்றன.

## சித்தாந்த சைவமும் ஏனைய சைவப்பிரிவுகளும் :

சித்தாந்த சைவம் போலச் சைவாகமங்களையே சிறப்புப் பிரமாணமாகக்கொள்ளினும், அவற்றின் உண்மைப்பொருளைக் காணமாட்டாது சிலவிடத்து மயங்கிப் பொருள்கொள்ளும் மதங்களும் சிலவுள்ளன. சைவாகமங்களைக் கொள்கின்ற வகையில் அவை அனைத்தும் சைவம் என்றே பெயர்பெறும். அவை, ஐக்கிய வாத சைவம், பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம்,

ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம், சுத்த சைவம் என்பன. சைவாகமங்களின் பொருளை உள்ளவாறு உணர்ந்து உணர்த்தி நிற்றலால் சித்தாந்த சைவம் பிற அனைத்துச் சைவங்களிலும் வேறுபட்டு, சமயங்கள் அனைத்திலும் மேலாய் — சமயாதீதமாய் விளங்குகின்றது.

சைவத்தில் சமயாசாரியர் என்றும், சந்தானசாரியர் என்றும் சொல்லப்படுகின்ற இருதிறத்து ஆசிரியரும் தங்கள் தோத்திரங்களினாலும் சாத்திர உபதேசங்களினாலும் விளக்கியருளியது இந்தச் சித்தாந்த சைவத்தையே யாகும்.

சிவாத்துவித சைவம், நீலகண்ட சிவாசாரியர் என்பவரால் வேதாந்த சூத்திரமாகிய பிரம்மசூத்திரத்திற்கு எழுதப்பட்ட பாடியத்தால் சிறப்புப் பெறுவதாயிற்று.

சிவசமவாத சைவத்தை அகோர சிவாசாரியர் நிலைநாட்டியதாக மாதவச் சிவஞான யோகிகள் குறிப்பிடுகின்றார். சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு உரை செய்த ஆசிரியர் ஆறுபேர்களில் 'ஞானப்பிரகாசர்' என்பவர் சிவசமவாதத்தை அவ்வுரை வாயிலாக நிலைநாட்டியுள்ளார். அவ்வுரைக்குச் சிறியதும் பெரியதுமான இரு மறுப்புக்களை மாதவச்சிவஞான யோகிகள் உரைநடையில் எழுதினர். அவர் எழுதிய 'எடுத்து' என்னும் சொல்லுக்கு இட்ட வைரக் குப்பாயம் என்னும் ஒரு சிறிய உரை நடையும் சிவசமவாத உரை மறுப்பேயாகும்.

'ஐக்கியவாத சைவமாவது வீரசைவமே' என யாழ்ப்பாணத்துத் திரு. சபாபதி நாவலர் தமது திராவிடப் பிரகாசிகையில் குறித்துள்ளார். என்றாலும் அதை அறுதியிடுதல் அரிதாயுள்ளது.

இவ்வாறு சைவங்கள் பலவற்றிற்குங்கூட அப்பாற்பட்டதாய்ச் சித்தாந்த சைவம் விளங்குகின்றது.

## பிரமாணம் அல்லது அளவை :

சித்தாந்த சைவம் ஏனை எல்லாச் சமயங்களிலும் வேறுபடுதற்குரிய காரணம் இதுவரையில் ஒருவாறு பொதுவாகக்

கூறப்பட்டது. இனிச் சிறப்பு வகையில் நுட்பமாக ஆராயப் புகுந்தால் சித்தாந்த சைவம் பிற சமயங்களினின்றும் வேறு படுதற்குரிய காரணங்கள் பலவாகும்.

தத்துவ ஆராய்ச்சி சித்தாந்த சைவத்தில் பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என நான்கு வகையில் வைத்துச் செய்யப்படுகின்றது. சிவஞானபோதநூலே அதன் உரை இவ்வாறு நான்கு இயல்களாகப் பிரித்துக் காட்டியிருத்தல் காணத் தக்கது.

(1) பிரமாணமாவது அளவை. அஃதாவது, அறிதற்குரிய பொருளைத் திட்டவட்டமாக அளந்து அறிதற்குரிய கருவி.

அளத்தற் கருவியை, 'பிரமாணம்' என்றும், அளப்பவனை 'பிரமாதா' என்றும் வடநூலார் கூறுவர்.

எவ்விடத்திலும் அளப்பவனாய் இருப்பது உயிரே. அதனால் தத்துவத்துறையிலும் அளப்பவனாவது உயிரே.

தத்துவத் துறையில் அளக்கப்படும் பொருள் சித்தாந்த சைவத்தின்படி, 'பதி, பசு, பாசம்' என மூன்றாகும். எல்லாப் பொருளும் இம்மூன்றிற்குள் அடங்குதல் காணலாம். அதனால் தத்துவ நூல்கள் அனைத்திலும் கூறப்படும் பொருள்கள் இம் மூன்றேயாகும். இதனை, "சிவப்பிரகாசம்" என்னும் சித்தாந்த நூல்,

"பலகலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்
பதிபசுபாசம் தெரித்தல்"

எனக் கூறுவதனாலும் அறியலாம்.

பதி – கடவுள். பதி முதலிய மூன்றும் தமிழில் முறையே இறைவன், உயிர், தளை எனக் கூறப்படுகிறது.

அளப்பவன் (பிரமாதா), அளக்கப்படும் பொருள் (பிரமேயம்) பற்றிச் சமயங்களிடையே மிகுதியான கருத்து வேறுபாடில்லை, ஆயினும் அளவை (பிரமாணம்) பற்றிமிகுந்த கருத்து வேறுபாடு உள்ளது. அளவையைப் பற்றிச் சிறப்பாகக் கூறுவன, நியாயம், வைசேடிகம் என்னும் நூல்களாகும்.

அவை இரண்டிற்கும் இடையே கொள்கை வேறுபாடு மிக இல்லை. அதனால் அவை இரண்டையும் பற்றிய கொள்கைகள் அனைத்தும் தருக்கமதம் என ஒருமதக் கொள்கைகளாகவே குறிக்கப்படுகின்றன. தருக்கநூற்கொள்கை உடையவர்கள் தார்க்கிகர் எனப்படுவர். அவருள் மேற்கூறிய நூல்களை ஒட்டி ஒருசாரார் நையாயிகர் என்றும், மற்றொரு சாரார் 'வைசேடிகர்' என்றும் சொல்லப்படுகின்றனர். அளவை முறையில் இவர்கள் கொள்கையையே பிறமதங்களும் பின்பற்றுகின்றன. ஆயினும், சைவசமயம் அவரது கொள்கையினின்றும் வேறுபடுகின்றது.

## நான்கு வகைப் பிரமாணங்கள் :

தருக்க மதத்தின்படி பிரமாணங்கள் நான்கு வகைப்படும். அவை, (1) பிரத்தியட்சம், (2) அனுமானம், (3) சப்தம், (4) உபமானம் என்பன. இவை முறையே தமிழில் காட்சி அளவை, கருதலளவை அல்லது வழியளவை, உரையளவை' ஒப்பளவை எனப்படுகின்றன.

கண் முதலிய பொறிகளால் பொருள்களை நேரே கண்டு உணர்வது காட்சியளவை அல்லது பிரத்தியட்சப் பிரமாணம், கண் முதலிய பொறிகட்குப் புலனாகாது மறைந்து நிற்கும் பொருள்களை எஞ்ஞான்றும் அவற்றை விட்டு நீங்காது அவற்றோடு உடன்நிகழ்வனவாகிய பொருளைக்கண்டு அவற்றை ஏதுவாகக் கொண்டு மறைந்து நிற்கும் பொருளை உணர்வது, கருதலளவை அல்லது அனுமானப்பிரமாணம். முன்பு அறியாத பொருளை அதனோடு ஒப்பாக அறியப்பட்ட அதனை உவமையாகக் கொண்டு, அப்பொருளைப் பொருளாக உணர்வது ஒப்பளவை அல்லது உபமானப்பிரமாணம். இம்மூன்று பிரமாணங்களிலும் கருத்து வேறுபாடு இல்லை. ஆயினும்' சப்தப்பிரமாணம் என்பதில் தருக்க மதத்தினின்றும் சைவமதம் வேறுபடுகின்றது. சப்தம் என்பது சொல் அல்லது உரை உலகத்தில் வழங்கும் சொற்களாயினும் வேதாகமங்களில் உள்ள சொற்களாயினும் எல்லாம் சொற்களேயாகையால் இருவகைப்பட்ட அந்தஎல்லாச்சொற்களும்சப்தப்பிரமாணமே' என்பது தருக்கமதம் 'உலகத்தில் வழங்கும் சொற்களால்'

அறியப்படும் பொருள்கள், காட்சியளவை, கருதலளவை என்பவற்றாலும் அறியப்படுதலால், உலகமொழி அவ்விரு வகை அளவைகளின் வேறானவை அல்ல. மற்ற வேதாகமங்களில் உள்ள சொற்கள், காட்சிக்கும் கருத்துக்கும் அகப்படாத பொருள்களை அறிவிப்பன ஆகையால் அவையே சப்தப் பிரமாணம் அல்லது உரையளவை என வேறு அளவையாகும். எனவே ஆகம அளவையே உரையளவையாம் என்பது சைவ சித்தாந்தம்.

" காசாறும் உரை இம்மானத்து அடங்கிடாப்
பொருளைக் காட்டும் " ( அளவை இயல்–2.)

என்பது சிவஞானசித்தியார்.

இனி, 'உபமானப் பிரமாணம் ஒருவகை அனுமானமே ஆகையால் அதனை ஒருதனியளவையாகக் கொள்ளவேண்டுவதில்லை' என்பதும் சைவ சித்தாந்தத்தின் கொள்கை. இவ்வாறே வேறு பலவாகச் சொல்லப்படுகிற அளவைகளையும் சைவ சித்தாந்தம் ஒப்புக்கொண்டபோதிலும் அவற்றைத்தனியளவைகளாகக் கொள்ளாது காட்சி கருதல்களிலே அஃது அடக்கிக் கொள்கின்றது. அங்ஙனம் அடக்கப்படுகின்ற அளவைகள் ஆவன. இன்மை அளவை ( அநுபலத்திப் பிரமாணம் ),பொருள் அளவை ( அருத்தாபத்திப் பிரமாணம் ), ஒழிபு அளவை ( பாரிசேடப் பிரமாணம் ), உண்மை அளவை ( சம்பவப் பிரமாணம் ), வழக்களவை ( ஐதிகப்பிரமாணம் ), இயல்பு அளவை ( சுபாவப்பிரமாணம் ) முதலியனவாம்.

**சைவசித்தாந்தப்படி அளவை விளக்கம் :**

அளவையின் வகைகளில் இவ்வாறு வேறுபடுகின்ற சைவ சித்தாந்தம், 'அளவையாவது யாது' என்பதற்கு முடிவு கூறுவதிலும் பிற மதங்களினின்றும் பெரிதும் வேறுபட்டு நிற்கின்றது. அஃதாவது காட்சி முதலியவற்றிற்குத் துணைபுரிகின்ற கண் முதலிய பொறிகளும் பிறவும் ஆகியவற்றையே பிரமாணம் என மற்றை மதங்கள் கூறுகின்றன. ஆனால் சைவசித்தாந்தம் 'அவையெல்லாம் உபசாரத்தாற்பிரமாணம்' என்றும், 'உண்மையில் பிரமாணமாவது ஆன்ம, சிற்சத்தியே, அஃதாவது உயிரினது அறிவு ஆற்றலே என்றும் கூறுகின்றது.

'உயிர் அறிவுவடிவே ஆகையால், உயிரும் அதன் அறிவும் வேறு வேறு ஆவன அல்ல, அதனால், உயிரை – அளப்பவன் – அல்லது – பிரமாதா – எனக்கூறும் பொழுது அதனது அறிவு ஆற்றலையே - பிரமாணம் – எனக்கூறினால், பிரமாதாவும் பிரமாணமும் ஒன்றே ஆகிவிடுகின்றன அன்றோ' என்பது மேற்கூறிய சைவசித்தாந்தத்தின் கொள்கைப்பற்றிப் பிறமதங்கள் எழுப்புகின்ற தடையாகும்.

அறிவுக்கு இருநிலைகள் உண்டு. ஒன்று, தன்னையே தான் நோக்கி நிற்கின்ற அகநோக்கு நிலை. மற்றொன்று பிறபொருளை நோக்கிச் செல்கின்ற புறநோக்குநிலை, இந்த இரண்டனுள் தன்னையே தான் நோக்கி நிற்கின்ற அகநிலையில் அது பிரமாதாவும், புறப்பொருளை நோக்குகின்ற புறநிலையில் அது பிரமாணமும் ஆகி நிற்றற்குத் தடையில்லை என்பது மேற்கூறிய தடைக்குச் சைவசித்தாந்தம் கூறும் விடை. இதுபற்றியே சிவஞானசித்தியார், பிரமாணத்தைப் பற்றிக் கூறும்பொழுது, "உயிரினின்றும் பிறபொருளை நோக்கி ஓடுகின்ற அறிவே பிரமாணம்" என்பது அதன் பொருள்.

பிரமாணத்தைப்பற்றி வேறொரு கருத்துவேறுபாடும் உண்டு. அஃதாவது உள்ளதை உள்ளவாறு உணர்கின்ற அறிவே பிரமாணத் தன்மையையும் உடையதாகும். ஆனால், 'ஓர் அறிவு தான் உள்ளதைஉள்ளவாறு அறிகின்றதோ, தவறாக அறிகின்றதோ என்பது எதனால் அறியப்படுகின்றது' என்பது பிரமாணத்தைப்பற்றி எழுகின்ற ஒரு சிக்கலான வினா. அதற்கு 'ஓர் அறிவு பிரமாணத் தன்மையை உடையது என்பது பிறபொருள்களினாலேயே அறியப்படுகின்றது' என்பது தருக்கமதம் கூறும் விடை. சைவசித்தாந்தம் அவ்வாறு கூறாமல், 'ஓர் அறிவு தனது பிரமாணத்தன்மையைத் தானே அறியும்; பொருள்களைத்தவறாக உணர்த்தினால் தான் பிரமாணம் ஆகாது போகின்ற அந்தத் தன்மையை மட்டுமே பிறபொருள்களால் அறியும்' எனக் கூறுகின்றது.

பிரமாணத்திலே இவ்வாறு வேறுபட்டு நிற்கின்ற சித்தாந்த சைவம் வேறுபல பொருள்களிலும் தான் சிலதனித்தன்மைகளை

உடையதாய் நிற்கின்றது. அவையெல்லாம் மேலும் உணரத் தக்கனவாகும்.

## வினாக்கள்

1. சித்தாந்த சைவம் மற்ற சயங்களினின்றும எங்ஙனம் வேறுபட்டு நிற்கிறது என்பதை விளக்குக?

2. எவ்வாறு சமயங்கள் பலவற்றிற்கும் அப்பாற் பட்ட தாய்ச் சித்தாந்த சைவம் விளங்குகிறது?

3. சிவஞானபோத நூல் எவ்வாறு நான்கு இயலாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது?

4. பிரமாணங்கள் நான்கு பற்றி விரிவான குறிப்பு வரைக!

5. பிரமாணத்திலே சைவசித்தாந்த சைவம் ஏனைய வற்றிலிருந்து எவ்வாறு வேறு பட்டுநிற்கிறது?

கட்டுரை வழங்கியவர் : மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

காஞ்சிபுரம்.